வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 07.07.2022 வியாழக்கிழமை | இதழ் : 213 | பக்கங்கள் : 16




பெற்றோல் குண்டுகள் மூலம்:

# ஜனாதிபதி செயலகத்தை தாக்கி கட்டுப்பாட்டில் எடுக்கத் திட்டம்?

## போராட்டக்காரரின் பெயரில் காணொலி

கொழும்பு, ஜூலை 07

**ஜனாதிபதி செயலகத்தை தாக்கிக் கட்டுப்பாட்டில் கொண்டு வரவும், தாக்குவதற்கு தேவையான பெற்றோல் குண்டுகளை தயாரிப்பது எப்படி என்பது தொடர்பான செய்முறைகளை போராட்டக்காரர்கள் என்று சந்தேகிக்கப்படும் குழுவினர் வெளியிட்டுள்ளனர்.**

எதிர்வரும் 9ஆம் திகதி இந்தத் தாக்குதலுக்கு போராட்டக்காரர்கள் திட்டமிட்டுள்ளனர். இது தொடர்பான காணொலி ஒன்று சமூகவலைத் தளங்களில் உலா வருகின்றது. ஆனால், இந்தக் காணொலி உண்மையானதா அல்லது போராட்டத்தை குழப்பும் நோக்கில் அல்லது வேறு உள்நோக்கங்களின் அடிப்படையில் வெளியிடப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

எது எப்படி இருப்பினும், கொழும்புக்கு வரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் எவ்வாறு ஜனாதிபதி மாளிகையை தாக்கி தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது என்பது குறித்து திட்டமிடும் காட்சி பதிவகாகியுள்ளது.

ஜனாதிபதி மாளிகையை தாக்குவதற்கான பெற்றோல் குண்டுகளை எவ்வாறு தயாரிப்பது என்பது தொடர்பான செய்முறைகளும் இந்தக் காணொலியில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது என்றும் அறிய வருகின்றது. (ஐ-சி)

## மக்களை திசை திருப்ப முயற்சிக்க வேண்டாம்!

### ஜே. வி. பி தலைவர் அநுர

கொழும்பு, ஜூலை 07

மக்களின் கோரிக்கைகளை திசைதிருப்ப முயற்சிக்க வேண்டாம் என்று பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க, அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று கொழும்பில் அவர் நடத்திய செய்தி

15



## ஹாட்லி மாணவனின் புதிய கண்டுபிடிப்பு!

வடமராட்சி, ஜூலை 07

நாட்டில் எரிபொருள் நெருக்கடி நிலவும் சூழலில் மிதிவண்டியை மோட்டார் சக்தியிலும், வழமையான விதத்திலும் இயங்கவல்ல கலப்பு முறையாக உருமாற்றியுள்ளார் பருத்தித்துறை

15

## ஜனாதிபதியின் கூட்டத்தை புறக்கணித்தனர் எம். பிக்கள்!

கொழும்பு, ஜூலை 07

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூட்டிய ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டத்தில் பெருமளவு உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதி மாளிகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு முன்பாகவே, கூட்டத்தில் பங்கேற்க மாட்டோம் என்று சிலர் முன்கூட்டியே அறிவித்தனர் என்றும், சிலர் எந்த

15

## தென்னையிலிருந்து தவறி வீழ்ந்து மரணம்!

வடமராட்சி, ஜூலை 07

தென்னை மரத்திலிருந்து தவறிவீழ்ந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பருத்தித்துறை - புலோலி மத்தியைச் சேர்ந்த ஆறுமுகம் நவரட்ணம் (வயது-65) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

15

## வரலாற்றில் அவமானப்பட்ட முதல் ஜனாதிபதி கோட்டாபய!

### தென்னிலங்கை ஊடகம் விமர்சனம்

கொழும்பு, ஜூலை 07

நாட்டின் 44 வருட வரலாற்றில் அவமானப்பட்ட முதல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று கடுமையாக விமர்சித்துள்ளது.

பிரபல கட்டுரையாளரான ரஜித் கீர்த்தி தென்னக்கோன் எழுதிய அந்தக் கட்டுரையில்,

நாட்டில் எந்தவொரு நிறைவேற்று ஜனாதிபதியும் சந்திக்காத அவமானகரமான நிலையை கோட்டாபய ராஜபக்ஷ எதிர்கொண்டுள்ளார்.

15

## பஸ்ஸில் சென்ற இளைஞர் மயங்கி விழுந்து உயிரிழப்பு!

வடமராட்சி, ஜூலை 07

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி சென்ற பேருந்தில் பயணித்த இளைஞர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை பருத்தித்துறை - முதலாம் கட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இதில், 21 வயது இளைஞரே

15



## போராட்டம் நடத்திய ஹிருணிகா கைதாகி பிணையில் விடுவிப்பு!

கொழும்பு, ஜூலை 07

கொழும்பு - கோட்டையிலுள்ள ஜனாதிபதி இல்லம் அருகில் போராட்டம் நடத்திய ஹிருணிகா உட்பட பலர் கைதாகினர்.

நேற்று முற்பகல் ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணியினரால் ஜனாதிபதியின் இல்லம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில், ஜனாதிபதிக்கு எதிராகக் கோஷம்

15

## பண்ணைக் கடலில் முதியவரின் சடலம்!

யாழ்ப்பாணம், ஜூலை 07

யாழ்ப்பாணம் நகரை அண்டிய பண்ணைக் கடற்கரையில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப் பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் யார் என்று அடையாளம் காணப்படவில்லை.

கடலில் தொழிலுக்காக சென்ற

15

## கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் கண்ணீர் குண்டுவீசி கலைப்பு!

கொழும்பு, ஜூலை 07

கொழும்பு - கோட்டையில் ஜனாதிபதி மாளிகையை நோக்கி செல்ல முற்பட்ட விவசாயிகளின் ஆர்ப்பாட்டமும் பாராளுமன்றத்தை நோக்கி செல்ல முற்பட்ட கனிய வளங்கள் பாதுகாப்பு தொழில்சங்க

15



## இப்படியும் நடக்கிறது...!

இலங்கை இன்று வெளிநாடுகளையே நம்பியிருக்கின்றது என்பது ஒன்றும் இரகசியமானதல்ல. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில், அறுபதுகளிலிருந்து ஜப்பான் முக்கிய இடத்தை வகிக்கின்ற நாடு.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைக் காலத்தில், இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள், அந்த சமாதான பேச்சுக்களில் முக்கிய பங்கு வகித்தன. அந்த உதவிவழங்கும் நாடுகளில் ஜப்பானும் ஒன்று.

இலங்கையின் அபிவிருத்தியில் ஜப்பானின் பங்கு அளப்பரியது. ஆனால், மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில், அந்த நிலைமை மெல்ல மெல்ல மாறத் தொடங்கியது.

கடைசியாக மஹிந்த ஆட்சிக் காலத்தில் ஜப்பானுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்று, ஒப்பந்தம் கையெழுத்தான பின்னர் கிடப்பில் போடப்பட்டது.

இலங்கையில் இப்போது தொலைக்காட்சிகள் ஒளிபரப்பப்படுவதை டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கு மாற்றுவதற்காக ஜப்பானுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

டிஜிட்டல் தொலைக்காட்சிக்காக உலகத்தில் ஜப்பான் தவிர்ந்த மற்றைய எல்லா நடுகளிலுமே ஒரேவகையான தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் ஜப்பான் மாத்திரமே தனக்கென்று தனியான தொழில்நுட்பத்தை கொண்டிருக்கின்றது.

அவ்வாறு அந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தினால், ஜப்பானில் உற்பத்திசெய்யப்படும் தொலைக்காட்சிகளை மாத்திரமே இலங்கையில் பயன்படுத்த வேண்டிவந்திருக்கும்.

அதேவேளை, தற்போது ஒளிபரப்பப்படும் ஓர் அலை வரிசையில் உலகில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தினால், முப்பது டிஜிட்டல் சனல்களை ஒளிபரப்ப முடியும். ஆனால், அதுவே ஜப்பானிய தொழில் நுட்பம் எனில், ஆகக்கூடியது ஏழு சனல்களை மாத்திரமே ஒளிபரப்ப முடியும்.

ஆனால் இதுதொடர்பான விளக்கமோ, அல்லது ஆலோசனைகளையோ பெறாமலே, மஹிந்த அரசு ஜப்பானுடன் ஒப்பந்தத்தை செய்து முடித்நதது. அந்த ஒப்பந்தத்தை செய்து முடிக்க ஜப்பான் என்ன செய்திருக்கும் என்பதும் நமக்கு தெரியததல்ல.

ஆனால், அவ்வாறு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட பின்னர், துறைசார்ந்த வல்லுநர்களின் எதிர்ப்பையடுத்து அந்தத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

இது, ஜப்பானை ஆத்திரப்படுத்திய முதலாவது நிகழ்வு.

இதற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கத்தில், நகர அபிவிருத்திக்கு பொறுப்பாக இருந்த அமைச்சர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க, ஜப்பானை சமாதானப்படுத்தி, கொழும்பில் நவீன ரயில் போக்குவரத்திற்காக ஒப்பந்தம் ஒன்றைச் செய்தார்.

அந்த மொனோரயில் திட்டம் கொழும்பு கோட்டை - மலாபே மற்றும் கொழும்பு கோட்டை- மொறட்டுவ இடையே சேவையில் ஈடுபடவிருந்தது. உலக நாடுகளில் இருப்பதுபோன்ற மெற்றோ ரயில்கள் போன்றது இது.

கொழும்பில் பொதுப் போக்குவரத்திற்கு மிகப்பெரிய தீர்வாக இந்த திட்டம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அந்தத் திட்டம் கோட்டாபய ஆட்சி பதவிக்கு வந்ததும், கிடப்பில் போடப்பட்டது.

இதுவும் ஜப்பானை மீண்டும் ஆத்திரப்படுத்திய நிகழ்வு.

இப்போது, மீண்டும் ஜப்பானை ஆத்திரப்படுத்தும் நிகழ்வு ஒன்று அண்மையில் நடந்து முடிந்திருக்கின்றது.

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில், இரண்டாவது முனையம் அமைக்கும் பணியை ஜப்பானிய தைசேய் நிறுவனம் மேற்கொண்டுவருகின்றது. விமானப் போக்குவரத்து அமைச்சராக தற்போது பதவியிலிருக்கும் நிமால் சிறிபால டி சில்வா, அந்த நிறுவனத்தின்மீது அரசியல் அழுத்தம் பிரயோகிப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கத்தில் அரசியல் அழுத்தம் என்றால் அது எத்தகையது என்பது ஒன்றும் இரகசியமானது அல்ல. அமைச்சரின் இந்த அழுத்தம் குறித்து ஜப்பானிய நிறுவனத்தின் சார்பில் ஜப்பானிய தூதுவர் ஜனாதிபதியிடம் முறையிட்டிருப்பதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இந்த முறைப்பாடுகளின் பின்னர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நேரில் அழைத்து இது தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டதுடன், இடையூறு செய்ய வேண்டாம் என கண்டிப்பான உதத்ரவை விடுத்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

நாடு என்னதான் அல்லோல கல்லோலப்பட்டாலும், இவர்கள் திருந்துவதாக தெரியவில்லை.

**- ஊர்க்குருவி**

# போராட்டங்களில் ஈடுபடும் உரிமை மக்களுக்கு உண்டு!

## கர்தினால் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஜூலை 07

ஜனாதிபதிக்கு எதிராகவும் அரசாங்கத்துக்கு எதிராகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் மற்றும் முன்னெடுக்கப்படவுள்ள ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பதற்கான சுதந்திரம் மற்றும் உரிமை பொது மக்களுக்கு உண்டு. எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் பொது மக்கள் தங்களுக்குள்ள எல்லையை மீறாமல், நடந்து கொள்வது முக்கியமான விடமாகும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

"இந்த நாட்டை நேசிக்கும் பிரஜைகள் என்ற வகையில், தங்கள் பொறுப்புக்களை செய்யுமாறு நாம் எமது மக்களுக்கு கூறியுள்ளோம். அவரவர் மனசாட்சியின்படி, செயல்படுமாறு பொது மக்களிடம் கேட்டுக் கொள்கிறோம். காலிமுகத்திடலில் நடத்தப்பட்டு வரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென தங்களது மனசாட்சி கூறுவதாக இருந்தால், அது அவர்களது தீர்மானமாகும்.

அத்துடன், இந்த போராட்டத்தில் ஈடுபடும்போது, எந்த விதத்திலும், எவருக்கும் இம்சைகள் கொடுக்காது செயல்பட வேண்டியது முக்கியமான விடயமாகும். பொது மக்கள் அராசங்கத்துக்கு எதிராக தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்துவதன் சுதந்திரம் இந்நாட்டில் பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்நாட்டில் மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டிய தேவை இருப்பின், அந்த எதிர்ப்பை வெளிக்காட்டுவது நியாயமான விடயமாகவே நான் காண் கிறேன்.

மேலும், இம்மாதிரியான நடவடிக்கைகளின்போது, பொது மக்கள் தங்களது எல்லையை மீறாமல் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும்" என்றார். (ஐ)

## மைத்திரி, சஜித் அநுர, கரு அடுத்த பிரதமர் யார்?

கொழும்பு, ஜூலை 07

எதிரணி அரசியல் கட்சிகள் இணைந்து எதிர்காலத்தில் உருவாக்கவுள்ள அரசாங்கம் தொடர்பில் உடன்படிக்கையை தயாரித்து வருவதாக ஐக்கிய பிரஜைகள் குழுவின் அமைப்பாளர் சமீர பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று புதன் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து உருவாக்கவுள்ள அரசாங்கத்தின் பிரதமர் பதவிக்கு மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸநாயக்க மற்றும் கரு ஜயசூரிய ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதா அல்லது வேறு ஆட்சி முறையை அமைப்பதா என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. எனினும், அந்த நிர்வாகத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து நீண்டகாலமாக ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. புதிய அரசாங்கத்தை காலவரையறையுடன் நடத்துவதற்கு அடிப்படை உடன்பாடு ஏற்பட்டுள்ளது - என்றார் அவர். (ஐ)

## கந்தக்காடு கைதி உயிரிழப்பு; விசாரணை அறிக்கை தாமதம்

கொழும்பு, ஜூலை 07

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற சம்பவத்தில் கைதியொருவர் உயிரிழந்தமை தொடர்பில் இடம்பெறும் விசாரணை அறிக்கை மேலும் 2 தினங்களுக்கு தாமதமாகும் என புனர்வாழ்வு நிலைய ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் சில கைதிகளிடம் வாக்குமூலம் பெறவேண்டியிருப்பதன் காரணமாக அறிக்கையை வழங்குவதற்கு அதன் உறுப்பினர்கள் கால அவகாசம் கோரியுள்ளதாக அவர் மேலும் குறிப் பிட்டார்.

அதற்கமைய, குறித்த அறிக்கை நாளை வெள்ளிக் கிழமை தமக்கு கிடைத்தவுடன் அதே நாளில் விடயத் திற்கு பொறுப்பான அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவிடம் கையளிக்கவுள்ளதாக அவர் இதன் போது சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இராணுவ மற்றும் விமானப்படை உறுப்பினர்கள் நால்வரும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

## சங்கிலி அறுத்த இருவர் கைது!

வவுனியா, ஜூலை 07

வவுனியாவில் இரு இளைஞர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த வாரம் முதியவர் ஒருவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து இருவர் அவர் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துச் சென்றனர்.

முதியவர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்த நிலையில், இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் தோணிக்கல், ஸ்ரீமாபுரம் பகுதிகளை சேர்ந்த 33 மற்றும் 25 இரு இளைஞர்களை கைது செய்துள்ளதுடன், பசார் வீதியில் உள்ள தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் அடகு வைக்கப்பட்ட நிலையில் 6 அரைப் பவுண் சங்கிலியையும் மீட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## உதைத்த இராணுவ...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லெப். கேணல் குமாரசிங்க தான் தனக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என்பது அவர் கருத்து. அதற்கான ஆதாரமும் அவரிடம் உள்ளது.

லெப். கேணலின் இழிவான நடத்தை குறித்து இலங்கை இராணுவம் என்ன செய்ய விரும்புகிறது?

இந்தச் சம்பவம் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள லெப். கேணல் குமாரசிங்க, காயம் ஏற்படாதவாறே அந்த இளைஞனை உதைத்ததாகக் கூறுகிறார். குமாரசிங்க செய்தது மிகவும் கிறுக்குத்தனமான செயல் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இது தொடர்பில் இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் நிலந்த பிரேமரத்ன மிகவும் நகைச்சுவையான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அவரின் அறிக்கையும் தற்போது இணையத்தில் உள்ளது.

இவ்வாறானதோர் இக்கட்டான சூழ்நிலையில், ஊடகங்களுக்கு வன்முறைச் செய்திகளை வழங்கும் தளமாக இராணுவம் இருக்கக்கூடாது என நாங்கள் விரும்புகின்றோம். லெப். கேணல் விராஜ் குமாரசிங்கவை உடனடியாக பணி இடைநிறுத்தம் செய்வதும், சம்பவத்தின் சாட்சிகளை அவர்மீது செல்வாக்கு செலுத்த முடியாதவாறு மௌனமாக்குவதும் பாதுகாப்பு செயலாளர் மற்றும் இராணுவத் தளபதியின் பொறுப்பாகும். நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் மிகவும் கடினமான காலகட்டத்தை இந்நாட்டு மக்கள் கடந்து செல்கின்றனர். அந்த மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டால், முழு இலங்கையும் பெரிய போராட்டக் களமாக மாற வாய்ப்புள்ளது - என்றுள்ளது.

ஈழநாடு
Eelanadu
07.07.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆணி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ரணிலின் மூன்று வேளை உணவு?

ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில், ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவுக்கு சவால் விடுத்திருக்கின்றார். அதாவது, ஆறு மாதத்திற்குள் நாட்டின் பிரச்னைக்கு தீர்வை கொண்டுவரும் திட்டத்தை சமர்ப்பித்தால், தான் பிரதமர் பதவியிலிருந்து விலககிறேன் என்று அறிவித்திருக்கின்றார். அதேவேளை, ஆட்சியை கைப்பற்றுவது எவ்வாறென்று கற்றுக் கொள்ள விரும்பினால் தன்னிடம் வருமாறு, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். பாராளுமன்ற அமர்வுகள் சுவாரசியமான பட்டிமன்றம் போல் காட்சியளிக்கின்றது. ஆனால், மறுபுறமோ மக்கள் ஒரு வேளை உணவைக் கூட திருப்தியாக உண்ணமுடியாத நிலைமை ஏற்பட்டுவிடுமோ - என்னும் அச்சம் நிலவுகின்றது.

ரணில் பிரதமர் பதவியை பொறுப்பேற்றபோது, நாட்டிலுள்ள மக்களின் மூன்று வேளை உணவை உறுதிப்படுத்துவதுதான் தனது பிரதான இலக்கென்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், இப்போது அதனைக்கூட ரணிலால் செய்ய முடியுமா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. அந்தளவுக்கு நிலைமைகள் மோசமடைந்து செல்கின்றன. சிங்கப்பூர் தேசிய பல்கலைகழகத்தை சேர்ந்த, இலங்கை பொருளியில் நிபுணர் பேராசிரியர் கணேசன் விக்கினராஜா - நாடு மீண்டெழுவதற்கு அடுத்துவரும் மூன்று வருடங்களில் 20 தொடக்கம் 25 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவையென்று குறிப்பிடுகின்றார். இலங்கை மத்திய வங்கியின் கலந்துரையாடல் ஒன்றின்போதே அவர் இதனை குறிப்பிட்டிருக்கின்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் உடனடியாகக் கிடைக்க வாய்ப்பில்லை அதுவரையில் சமாளிக்க வேண்டும். இன்றைய சூழலில் இந்தியா ஒன்றுதான், நாட்டின் நிலைமையை சரிசெய்வதற்கு உதவக்கூடிய நிலையிலிருக்கின்றது என்றும் அவர் குறிப்பிடுகின்றார். இதற்கிடையில் அடுத்த ஆண்டு இன்னும் சிக்கலானதாக அமையலாம் என்று ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுகின்றார். தொடர்ந்தும் நிலைமை சிக்கலானதாகத்தான் இருக்கப் போகின்றதென்றால் அரசாங்கத்தின் பொறுப்புத்தான் என்ன?

சர்வகட்சி அரசாங்கத்தை ஒரு தீர்வாக முன்வைப்பவர்களும் அதற்கு பின்னர் இந்தப் பிரச்னையை எவ்வாறு கையாளப் போகின்றோம் - என்பதை மக்கள் முன்வைக்கவில்லை. ஆளும் பொதுஜன பெரமுனவும் அரசியல் செய்ய முற்படுகின்றது எதிரணியும் அரசியல் செய்ய முற்படுகின்றது. ஆனால், பாதிக்கப்பட்ட - தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்ற மக்கள் தொடர்பில் எவரும் கரிசனை காண்பிப்பதாகத் தெரியவில்லை. பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தால் ஒரு சிறப்பான நடுத்தர வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் சாதாரண வாழ்க்கைக்கு கீழிறங்கி விட்டனர். இந்த நிலைமை தொடர்ந்தால் உயர், நடுத்தர வர்க்க பிரிவு மக்களும் சாதாரண நிலைக்கு திரும்பும் நிலைமையே ஏற்படும். இப்போது மோட்டார் சைக்கிள் பாவிப்பவர்கள் சைக்கிளுக்கு மாறிக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சில மாதங்களில், ஆடம்பர வாகனங்களுக்கு பழக்கப்பட்டவர்களும் சைக்கிளுக்கு கீழிறங்கும் நிலைமை ஏற்படும்.

இந்த நிலைமையை எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்னும் திட்டம் எவரிடமும் இல்லை. இதற்கான காரணம் என்ன? ஏனெனில், இந்த நிலைமை திடீரென்று ஏற்பட்ட ஒன்றல்ல. இது ஒரு பொருளாதார புற்று நோய். நீண்ட காலமாக வளர்ந்துவந்தது. இப்போதுதான் வெளியில் தெரிகின்றது. 2009இல் யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதற்கான திட்டமிடலை செய்திருந்தால் நிலைமைகளை மாற்றியிருக்கலாம். ஆனால், ராஜபக்ஷக்களின் குடும்ப அதிகாரம் நிலைமைகளை மேலும் சீரழித்துவிட்டது.

தர்க்க ரீதியில் நோக்கினால் இதற்கான பொறுப்பை ராஜபக்ஷக்கள்தான் ஏற்க வேண்டும். ஏனெனில், 1990களுக்கு பின்னரான காலப்பகுதியில் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் யுத்தத்தில் அனைத்து ஆட்சியாளர்களும் பங்களித்திருக்கின்றனர். பிரேமதாஸ பங்களித்திருக்கின்றார். சந்திரிகா பங்களித்திருக்கின்றார். அவர்களின் பங்களிப்புக்களுடன் இணைந்ததுதான் ராஜபக்ஷக்களின் போர் வெற்றி. ஆனால், போர் வெற்றியென்பது தங்களுக்கு மட்டுமே உரித்தான ஒன்றாகவே ராஜபக்ஷக்கள் விளம்பரப்படுத்தினர். இந்த வாதம் சரியென்றால், பொருளாதார நெருக்கடிக்கான முழுப் பொறுப்பையும் ராஜபக்க்களே ஏற்க வேண்டும். ஆனால், ராஜபக்ஷக்களால் முடியாமல் போனதை, தன்னால் சரிசெய்ய முடியுமென்னும் அடிப்படையில்தான் ரணில் பிரதமரானார். ஆனால், முன்னேற்றம் ஏற்படவில்லை. ஆகக் குறைந்தது மூன்று வேளை உணவில்லாவிட்டாலும் கூட, இரண்டு வேளை உணவை யாவது ரணிலால் உறுதிப்படுத்த முடியுமா?

# உதைத்த இராணுவ அதிகாரியின் வாயில் சப்பாத்தை திணித்திருக்க வேண்டும்!

## "திவயின" நாளிதழ் கடும் சீற்றம்

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இளைஞரை காலால் எட்டி உதைத்த இராணுவ அதிகாரியின் சப்பாத்தை அவரின் வாயில் வைத்து திணித்திருக்க வேண்டும் என்று சிங்கள இனவாத ஊடகமான "திவயின" கடும் சீற்றத்துடன் ஆசிரியர் தலையங்கம் வெளியிட்டுள்ளது.

"திவயின" நாளேட்டில் நேற்று புதன் கிழமை "இடி-அமீன் குமாரசிங்க" எனும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

குருநாகல் - யக்கஹாபிட்டியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இராணுவ சிப்பாய்களால் ஆயுதம் ஏந்திய இளைஞனை இராணுவ லெப். கேணல் ஒருவர் உதைக்கும் காட்சிகள் அடங்கிய காணொலி இந்த நாட்களில் பரவி வருவதை எமது வாசகர்கள் அறிவர். இணையம் ஓர் அசுத்தமான இடம். நல்ல இடமும் கூட. இது மிகவும் அசுத்தமான இடமாகும். ஏனெனில், இது ஒரு வலைப் பின்னல் தளமாகப் பயன்படுத்தப்பட்டு அப்பாவி மக்களைப் பகிரங்கமாக அவதூறு செய்யவும், தவறான செய்திகளைப் பரப்பவும் முடியும்.

மேலும், இது சிறந்த இடமாகும், ஏனெனில் இது சமூகத்தில் ஊழல் மோசடிகள் மற்றும் பிற அழுக்கு விளையாட்டுகளை உடனடியாக அம்பலப்படுத்தும் மற்றும் முறைப்பாடு அளிக்கும் தளமாகும். யூ-ரியூப், பேஸ்புக், வட்ஸ்அப் போன்ற இணைய வலையமைப்பு இல்லையென்றால், மேற்கூறிய இளைஞன் எப்படி உதைக்கப்பட்டான் என்பதை இராணுவ லெப். கேணல் ஒருபோதும் வெளிப்படுத்தமாட்டார்.

இணையம் மக்கள் அறிக்கையிடல் என்ற கருத்தை ஊக்குவித்துள்ளது. ஒரு சம்பவத்தை முறைப்பாடு அளிப்பதற்கும், அதனை வானொலி, தொலைக்காட்சி அல்லது செய்தித்தாளுக்கு அனுப்புவதற்கும், அறிக்கையிடும் நபர் ஓர் ஊடகவியலாளராக இருக்க வேண்டும். அதற்குக் காரணம், இந்நாட்டில் உள்ள வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள், பத்திரிகை அலுவலகங்கள் என்பன பொதுமக்களுக்குப் பொறுப்புக்கூறும் நிறுவனங்களாகவே இருக்கின்றன. இணையம் மற்றும் அதன் தொடர்பு வலையமைப்பு, சமூக ஊடக வலைப்பின்னல்கள் ஆகியவற்றுக்கு இறந்த பிசாசு பொறுப்பல்ல பொறுப்பும் அல்ல. எனவே, சமூகத்தில் நடக்கும் அநீதியை பார்க்கும் எந்த குடிமகனும், கையில் கைபேசி இருந்தால், அது தொடர்பான ஊழல் அல்லது மோசடியை படம் பிடித்து, உடனடியாக இணையத்தில் பதிவேற்றம் செய்யலாம்.

குறித்த இளைஞனை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து தாக்கிய லெப். கேணல் பெயர் விராஜ் குமாரசிங்க என தெரியவந்துள்ளது. யூ ரியூப்பிற்கு சென்று இடி அமீனின் பழைய காணொலிகளைப் பார்த்தால் ஒன்று தெளிவாகத் தெரியும் லெப். கேணல் விராஜ் குமாரசிங்கவினதும் இடி அமீனின் நடத்தையும் ஒன்றுதான். இடி அமீனைப் பற்றி இங்கு சிறிது அறியத்தருகின்றோம்.

உகண்டா இராணுவத்தில் அதிகாரியாக இருந்த இடி அமீன் இராணுவ சதிப்புரட்சி மூலம் ஆட்சிக்கு வந்து அந்நாட்டை ஆண்டார். இடி அமீனுக்கும் தலையில் முடி இல்லை. விராஜ் குமாரசிங்கவுக்கும் மொட்டைதான். இடி அமீனும் உயரமானவர். விராஜ் குமாரசிங்கவும் உயரமானவர். எனினும், இந்த இராணுவ அதிகாரியின் நடவடிக்கைகள் மிகவும் கேவலமானதும், இழிவானதும் என்றே கூற வேண்டும். சுற்றிலும் கூடியிருந்த மக்கள் செய்ய வேண்டியதெல்லாம், லெப். கேணலின் பிடித்து, அவரின் காலைத் திருகி, சப்பாத்தை வாயில் திணித்திருக்க வேண்டும். குறித்த இளைஞன்மீதான தாக்குதல் காணொலியைப் பார்க்கும் போது லெப். கேணல் விராஜ் குமாரசிங்க சுயநினைவின்றி அல்லது அறியாமலேயே நடந்து கொள்கின்றார் என்பது தெளிவாகின்றது. இராணுவ வீரர்கள் அந்த இளைஞனைப் பிடித்துக் கொண்டிருக்கும்போது, எங்கிருந்தோ குமாரசிங்க வந்து அந்த இளைஞனை எட்டி உதைத்துவிட்டு அவரைக் கடந்து சென்று வெறித்தனம் ஆடுவதனை கண்டோம். இந்த இளைஞனை லெப். கேணலிடம் இருந்து எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த பொலிஸார் மீட்டனர்.

எமக்குத் தெரிந்த வரையில், எந்த ஒரு பதற்றகரமான சூழ்நிலையிலும் தலையிடும் அதிகாரம் இராணுவத்திற்கு இல்லை. மேற்கண்ட சம்பவத்தில் இருந்து பல கேள்விகளும் நிலைப்பாடுகளும் எழுகின்றன. 88, 89 பயங்கரவாத நடவடிக்கைக்களின்போது குமாரசிங்க இராணுவத்தில் இருந்திருந்தால் இறந்த இளைஞர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்திருக்கும் என்பதுதான் பிரச்னை. இதிலிருந்து வெளிப்படும் நிலைப்பாடு என்னவென்றால், போர் மற்றும் கோவிட் தடுப்பூசி வேலைகளைத் தவிர மற்ற சிவில் நடவடிக்கைகளில் இராணுவத்தை ஈடுபடுத்துவதைத் தவிர்க்க அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும்.

இதேவேளை, காலி தெவத்த பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து இராணுவ அதிகாரி ஒருவர் பேருந்து ஓட்டுநர் ஒருவரை தாக்கியுள்ளதாக தெரிய வந்துள்ளது. இராணுவம் இது போன்ற அத்துமீறல்களை செய்யக்கூடாது. இந்நாட்டு மக்கள் தற்போது கொதிப்படைந்துள்ளனர். அவர்கள் தீயில் எரிவதைத் தாங்கத் தொடங்கியுள்ளனர். இராணுவம் இழக்க வேண்டியது நிறைய உள்ளது. ஆனால், தீயில் எரியும் பொதுமக்களுக்கு இழப்பதற்கு ஒன்றுமில்லை.

இதேவேளையில், குமாரசிங்க சம்பவத்தை தனது கைபேசியில் பதிவு செய்த ரசிக ஹேரத்துக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார். சம்பவத்தின்போது, அவர் யக்கஹாபிட்டியில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் இருந்தார்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூலை - 07 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - ஆனி 23
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : அஷ்டமி




**மேடம்**
முயற்சிகள் வெற்றியாகும் நாள். தடைகளைக் கடந்து நினைத்ததை சாதிப்பீர்கள். தொழிலில் உண்டான தடைகளை சரி செய்வீர்கள். முயற்சியில் அனுகூலம் காண்பீர்கள்.

**இடபம்**
பிள்ளைகளின் வளர்ச்சியைக் கண்டு பெருமைப் படுவீர்கள். குடும்பத்தினரின் பாராட்டை பெறுவீர்கள். பிறரது பலம், பலவீனத்தை தெரிந்து செயல்பட்டு வெற்றி காண்பீர்கள்.

**மிதுனம்**
செல்வாக்கு உயரும் நாள். விருப்பப்படி செயல்பட்டு உங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பணியாளர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு நீங்கி ஒற்றுமையுடன் செயல்படுவீர்கள்.

**கடகம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். விவேகத்துடன் செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த செய்தி வரும். கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்னை தீரும்.

**சிம்மம்**
பணியிடத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் சரியாகும். எதிர்பார்த்த வருவாய் கிடைக்கும். தொழிலில் உண்டான போட்டியை சரி செய்வீர்கள். உங்கள் அணுகுமுறை ஆதாயத்தை ஏற்படுத்தும்.

**கன்னி**
பணியிடத்தில் நீங்கள் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சி கூடும். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். குரு அருளால் உங்கள் எண்ணம் நிறைவேறும். நிதிநிலை உயரும்.

**துலாம்**
திடீர் செலவுகள் ஏற்பட்டு பணத்தேவை அதிகரிக்கும். போராடி சமாளிப்பீர்கள். பயணத் திட்டத்தில் மாற்றம் செய்வீர்கள். கவனக்குறைவால் செலவுகளை சந்திப்பீர்கள். சங்கடத்தை சந்திப்பீர்கள்.

**விருட்சிகம்**
இழுபறியாக இருந்த செயல்கள் நிறைவேறும். வராமல் இருந்த பணம் வரும். பிரபலங்களின் துணையுடன் வழக்குகளில் வெற்றி காண்பீர்கள். சிக்கல் தீரும். விரும்பியதை இன்று அடைவீர்கள்.

**தனுசு**
தொழிலில் உண்டான நஷ்ட நிலைக்கு தீர்வு காண்பீர்கள். உங்கள் அணுகுமுறை ஆதாயம் தரும். வேலை தேடி வந்தவர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு உண்டாகும்.

**மகரம்**
தடைகளை விலக்கி முயற்சியில் வெற்றி காண்பீர்கள். திட்டமிட்டபடி செயல்படுவீர்கள். நிறைவேறாமல் இருந்த ஒரு முயற்சி நிறைவேறும். பணியிடத்தில் உண்டான சங்கடங்கள் விலகும்.

**கும்பம்**
முயற்சிகளில் நீங்கள் எதிர்பார்த்த நன்மையை அடைய முடியாமல் போகும். மனதிற்கு சங்கடம் உண்டாகும் வகையில் சில செயல்கள் நடந்தேறும். பழைய பிரச்னை ஒன்று மீண்டும் தலையெடுக்கும்.

**மீனம்**
தடைபட்டிருந்த முயற்சி இன்று நடந்தேறும். எதிர்பார்த்த நன்மையை அடைவீர்கள். நீண்ட நாளுக்கு பிறகு உங்கள் மனம் மகிழும்படியான சம்பவம் ஒன்று நடைபெறும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்னை தீரும். எதிர்பாராத வரவு உண்டு.

# இலங்கை அகதிகளை பாதுகாப்பாக மீட்க தனுஷ்கோடியில் படகுகளை நிறுத்துங்கள்!

## தமிழக மீனவர்கள் அரசிடம் கோரிக்கை

சென்னை, ஜூலை. 07

**இலங்கையிலிருந்து வரும் அகதிகளைப் பாதுகாப்பாக மீட்க தனுஷ்கோடியில் கரையோரப் பொலிஸாரின் ரோந்துப் படகுகளை நிறுத்த வேண்டும் என இந்திய மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.**

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியால் அகதிகளாக வரும் பெரும்பாலானோர் தனுஷ்கோடி அருகே உள்ள மணல் தீடைகளில் இறங்குகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கரையோரப் பொலிஸாருக்குச் சொந்தமான படகுகள், தனுஷ்கோடியில் ரோந்து செல்லவும், இலங்கையிலிருந்து வரும் அகதிகளைப் பாதுகாப்பாக மீட்கவும் தனுஷ்கோடி இறங்குதளத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்று இந்திய மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று 'த ஹிந்து' செய்தியில் சுட்டிக்காடடப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் இந்தியாவில் தஞ்சமடைபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்த வண்ணமுள்ளது.

(அ)

# அ. தி. மு. க. பொதுக்குழு கூட்டம் தடை விதிக்க நீதிமன்று மறுப்பு

சென்னை, ஜூலை 07

ஜூலை 11 ஆம் திகதி நடைபெறவுள்ள அ. தி. மு. க. பொதுக்குழு கூட்டத்துக்கு தடை விதிக்க முடியாது என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அ. தி. மு. க. ஒற்றை தலைமை விவகாரத்தில் கட்சியின் செயல்குழு, பொதுக்குழு கூட்டத்தில் அறிவிக்கப்படாத புதிய தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்தது.

இந்த உத்தரவை எதிர்த்து தமிழக முன்னாள் முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில் நேற்று நடைபெற்றது.

அதில், ஜூலை 11 ஆம் திகதி நடைபெறவுள்ள அ. தி. மு. க.பொதுக்குழுவுக்குத் தடை விதிக்க முடியாது என நீதிபதிகள் தெரிவித்தனர்.

முன்னதாக, "அ. தி. மு. க. உள்கட்சி விவகாரத்தில் நாங்கள் எப்படி தலையிட முடியும்? சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ளது. சென்னை உயர்நீதிமன்ற ஒரு நபர் அமர்வு தான் இதுகுறித்து முடிவெடுக்க வேண்டும். அ. தி. மு. க. உட்கட்சி விவகாரத்தில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. பொதுக்குழு தொடர்பாக எந்த உத்தரவும் நாங்கள் பிறப்பிக்கப் போவதுமில்லை" என்று கூறிய நீதிபதிகள், இரு தரப்பினரும் பதில் அளிக்க உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தனர்.

மேலும், ஜூன் 23 அ. தி. மு. க. பொதுக் குழுவில் புதிய தீர்மானங்கள் நிறைவேற்றக் கூடாது என்ற சென்னை உயர்நீதிமன்ற இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வின் உத்தரவுக்கும் உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்ததுடன், பொதுக்குழு குறித்து முடிவெடுக்க பன்னீர் செல்வம் தரப்பு, சென்னை உயர்நீதிமன்ற தனி நீதிபதி அமர்வை நாடலாம் என்று கூறியுள்ளது.

இதையடுத்து அ. தி. மு. க. உள்கட்சி விவகாரம் தொடர்பான வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் தனிநபர் அமர்வுக்குச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பழனிசாமி மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்கு தடை!

புதுடில்லி, ஜூலை 07

எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் இன்று வியாழக்கிழமை விசாரணைக்கு வரவிருந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

கடந்த ஜூன் 23 ஆம் திகதி நடைபெற்ற அ. தி. மு. க. பொதுக்குழு கூட்டத்தில் ஓ. பன்னீர் செல்வம் ஒப்புதல் அளித்த 23 தீர்மானங்கள் தவிர, வேறு தீர்மானங்கள் எதுவும் நிறைவேற்றக்கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், பொதுக்குழுவில் நீதிமன்ற உத்தரவை பொதுக்குழு மீறிவிட்டதாக பன்னீர் செல்வம் தரப்பு உயர்நீதிமன்றில் அவமதிப்பு வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் இன்று வியாழக்கிழமை விசாரணைக்கு வரவிருந்த நிலையில் அதற்கு இடைக்காலத் தடை விதித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக, 23 தீர்மானங்கள் தவிர வேறு தீர்மானங்கள் எதுவும் நிறைவேற்றக்கூடாது என்ற சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து எடப்பாடி கே. பழனிசாமி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில் நேற்று நடைபெற்றது.

மேல் முறையீட்டு வழக்கில், "அ. தி. மு. க. உள்கட்சி விவகாரத்தில் உச்சநீதிமன்றம் தலையிட முடியாது. பொதுக்குழுவுக்கு நாங்கள் தடை விதிக்க முடியாது. சென்னை உயர்நீதிமன்ற ஒருநபர் அமர்வுதான் இதுகுறித்து முடிவெடுக்க வேண் டும். முன்னதாக இரு நபர் அமர்வின் உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்படுகிறது" என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

இந்த வழக்கின்போது எடப்பாடி பழனிசாமிக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்கும் உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.

# திருவட்டாறு ஆதிகேசவர் கோயிலில் 418 வருடத்தின் பின் கும்பாபிஷேகம்!

நாகர்கோவில், ஜூலை 07

108 வைணவ திவ்ய தேசங்களில் 76ஆவது திவ்ய தேசமான கன்னியாகுமரி திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோயிலில் நேற்று முன்தினம் மகா கும்பாபிஷேகம் இடம் பெற்றது. இந்த ஆலயத்தில் கும்பாபிஷேகம் 418 ஆண்டுகள் கடந்து இடம்பெற்றுள்ளது.

திருவட்டாறு தலம் 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திரேதா யுகத்தில் தோன்றியது. திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோயில் தோன்றுவதற்கு முன்பே இக்கோயில் தோன்றியது என்பதால் இது ஆதி ஆனந்தம் என்று அழைக்கப்படுகிறது. தென்னாட்டின் வைகுண்டம் எனப் போற்றப்படும் இக்கோயிலில் பெருமாள் அனந்த சயன திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# யாழ்.பரமேஸ்வரப் பெருமானின் புனராவர்த்தன கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 07

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலுள்ள ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நேற்று புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

இதற்கான கிரியைகள் அனைத்தும் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் இடம்பெற்றன.

இன்று புதன்கிழமை காலையாக பூஜையைத் தொடர்ந்து மகாபூர்ணாகுதி இடம்பெற்று பரமேஸ்வரப் பெருமானுக்கு தீபாராதனை, விசேட பூசை இடம்பெற்று, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணங்களுடன் 108 நடன மாணவிகளின் நிருத்தியாஞ்சலியும், கீதவாத்திய உபசாரங்களும் சமர்ப்பிக்கப்பட்டது.

தொடர்ந்து அந்தர்பலி, பகிர்பலி என்பன வழங்கப்பட்டதன் பின்னர் பிரதான கும்பங்கள் புறப்பட்டு வீதிப் பிரதட்சிணமாக வந்து காலை 6 மணி முதல் 7மணி வரையான மிதுன லக்ன சுபமுகூர்த்த வேளையில் ஸ்தூபி அபிஷேகம், ராஜ கோபுர கும்பாபிஷேகம், அனைத்து மூர்த்திகளுக்குமான மகாகும்பாபிஷேகம் என்பன இடம்பெற்றது. (அ)

# புதிய திரிபு கொரோனா வைரஸ் இலங்கையிலும் பரவும் அபாயம்!

## 4 தடுப்பூசிகளும் கட்டாயம் என்று அறிவுறுத்து



கொழும்பு, ஜூலை 07

**“புதிய திரிபு கொரோனா வைரஸ் இலங்கையிலும் பரவும் அபாயம் உள்ளதால், 4 தடுப்பூசிகளையும் உரிய வகையில் செலுத்திக்கொள்வதே, அதிலிருந்து விடுபடுவதற்கான சிறந்த வழியாகும்.”**

- இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

கொரோனா 4ஆம் தடுப்பூசியை சகல அரச வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்கள் மற்றும் பெயரிடப்பட்டுள்ள தடுப்பூசி மையங்களிலும் செலுத்திக்கொள்ள முடியும்.

தடுப்பூசியைச் செலுத்திக் கொள்வதன் ஊடாக வைரஸ் தொற்றின் பாதிப்பைக் குறைத்துக்கொள்ள முடியும் என்பதுடன், மரணம் ஏற்படும் அபாயத்திலிருந்து விடுபடவும் முடியும்- என்றார். (அ)

# எரிபொருள் நிரப்பு நிலையம் மீது தாக்குதல் நடத்திய 13 பேர் கைது!

கொழும்பு, ஜூலை. 07

வெள்ளவாயவில் எரிபொருள் நிரப்பு நிலையம் மீது தாக்குதல் நடத்திய 13 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட நபர்கள், எரிபொருள் தீர்ந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, போத்தல்கள் மற்றும் கற்களால் நிரப்பு நிலையத்தைத் தாக்கிய தாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலைய பெயர் பலகைக்கு சேதம் ஏற்பட்டதுடன், சம்பவ இடத்தில் இருந்த பொலிஸார் ஒருவர் காயமடைந்தார்.

சம்பவத்தை தொடர்ந்து 20 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

## அரசியல் நெருக்கடி;

# 16 மேற்பார்வை குழுக்கள் அமைக்க அரசு உத்தேசம்

கொழும்பு, ஜூலை 07

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை கருத்திற்கொண்டு, 16 மேற்பார்வை குழுக்களை அமைக்க உத்தேசித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், இந்த மேற்பார்வைக் குழுக்களில் அரசியலில் நேரடியாக ஈடுபடாத இளைஞர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இவற்றின் மூலம், பொதுமக்களுக்கான நிவாரணம், பொருளாதார மீட்சி மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடியும் என்றும் பிரதமர் நம்பிக்கை வெளியிட்டார். இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல, இந்த மேற்பார்வைக் குழுக்கள், 19 ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் மீண்டும் நடைமுறைப் படுத்தப்பட்ட பின்னர் அமைக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இல்லையேல், 20ஆவது திருத்தத்தின் கீழ் அதிக அதிகாரங்களை கொண்டுள்ள ஜனாதிபதி, இந்த மேற்பார்வைக் குழுக்களின் செயற்பாட்டுக்கு இடையூறை மேற்கொள்ளமுடியும் என்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இதேவேளை, தமது கருத்தை வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார, ஜனாதிபதி 19 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ள போதும், நீதியமைச்சர் விஜய தாஸ ராஜபக்ஷ, 22 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்களை வழங்கியுள்ளதாக சுட்டிக்காட்டினார். (அ)

# இலங்கைக்கான பயணங்களை தவிர்க்க கோருகின்றது பிரிட்டன்

கொழும்பு, ஜூலை 06

இலங்கைக்கான அத்தியாவசியமற்ற பயணங்களை தவிர்த்து கொள்ளுமாறு பிரிட்டனின் வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம் தமது பிரஜைகளை கோரியுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமை கருத்தில் கொண்டு இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அந்த அலுவலகம் விடுத்துள்ள ருவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருவதால், மருந்துகள், சமையல் எரிவாயு, எரிபொருள் மற்றும் உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடானது போக்குவரத்து, வணிகங்கள் மற்றும் அவசர சேவைகளை பாதிக்கிறது. இதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

இதன்போது, போக்குவரத்து பாதிப்பு, பாதைமூடல், அமைதியின்மை என்பன ஏற்படுகின்றன.

இதன்காரணமாக இலங்கைக்கு அத்தியாவசியமான பயணங்களை மாத்திரம் மேற்கொள்ளுமாறு வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம் கோரியுள்ளது. (அ)

# கிளிநொச்சி-யாழ். இடையே புதிய அலுவலக ரயில் சேவை!

யாழ்ப்பாணம், ஜூலை 07

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியினால் அலுவலக ஊழியர்களின் போக்குவரத்துக்கு பஸ்கள் இன்மையால் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. எனவே, இதனை நிவர்த்திக்கும் வகையில் கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான புதிய ரயில் சேவையை எதிர்வரும் வாரத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினமும் ஆயிரக்கணக்கான அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள் கிளிநொச்சிக்கு செல்கின்றனர். அவர்களின் வசதி கருதி போக்குவரத்து அமைச்சிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

அந்த அமைச்சின் அதிகாரிகள் குழுவொன்று கிளிநொச்சிக்கு சென்று இவ்விடயம் தொடர்பில் ஆய்வினை மேற்கொண்டதன் பின்னர், எதிர்வரும் வாரம் முதல் ரயில் போக்குவரத்தை ஆரம்பிக்குமாறு போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன பணிப்புரை விடுத்துள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகள் மற்றும் ரயில்வே பொது முகாமையாளர் ஏ.டி.பி. செனவிரத்ன, யாழ் ரயில் நிலைய அதிபர் பிரதீபன், கிளிநொச்சி மாவட்ட நிலைய அதிபர் ஸ்ரீ மோகன், கடற்றொழில் அமைச்சரின் மேலதிக ஒருங்கிணைப்புச் செயலாளர் கோடீஸ்வரன் ருஷங்கன் ஆகியோர் புதிய ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கு தேவையான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினர்.

பின்னர் வடமாகாண ரயில் சேவைப் பணிப்பாளர் விசுமித்ர மற்றும் கிளிநொச்சி ரயில் நிலைய அதிபர் சிகாமணி, மாவட்ட செயலாளர் ரூபாவதி கேதீஸ்வரன் ஆகியோருடன், ரயில் சேவையை ஆரம்பிப்பது தொடர்பிலான விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது. (அ)

# 19 ஐ விட சிறந்தது 22!

## நீதி அமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 07

19ஆவது திருத்தச் சட்டத்தை விடவும் 22ஆவது திருத்தச் சட்டம் சிறந்த விடயங்களை உள்ளடக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஒருவருக்கு தற்போது 3 அமைச்சுக்களை வைத்திருக்க முடியும் எனவும், ஆனால் 22 திருத்தச் சட்டத்தின் கீழ் அதனை ஒன்றாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



மேலும், மத்திய வங்கி ஆளுநர் நியமனம் தொடர்பில் மாற்றங்களை கொண்டு வந்துள்ளதாகவும் அமைச்சர் விஜயதாஸ தெரிவித்தார். (அ)

# மீண்டும் வருவேன்!

## கூறினார் மஹிந்த



**கொழும்பு, ஜுலை 07**
**“நான் மீண்டும் அரசியல் நடவடிக்கைகளைத் தொடங்குவேன். எதற்கும் பயப்பட வேண்டாம்.” -இவ்வாறு முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

உடல்நிலை மோசமாகி தீவிர சிகிச்சை பிரிவிலுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்ததன் பின்னர் நேற்றுமுன்தினம் முதல் தடவையாக பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பங்கேற்றார்.

இதன்போது மகிந்த ராஜபக்ஷ, தனது மீள் அரசியல் பிரவேசம் குறித்து தகவல் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பங்குபற்றுதலுடன் நேற்று முன் தினம் பாராளுமன்ற சபை அமர்வுகள் நடைபெற்றன.

மே மாதம் 09ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட கலவரத்தின் பின்னர் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜினாமா செய்து அரசியல் நடவடிக்கையிலிருந்து ஒதுங்கியிருந்தார். எனினும் மீண்டும் அரசியல் பணிகளை ஆரம்பித்துள்ளதாக அவர் நேற்று முன் தினம் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் குழுக் கூட்டத்துக்கு வந்த பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள், மகிந்த ராஜபக்ஷவின் உடல் நலம் குறித்து கேட்டறிந்தனர். மகிந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அண்மையில் வெளியான செய்திகள் குறித்தும் வினவியுள்ளனர்.

“நானும் வீட்டிலிருந்து அந்த செய்திகளைப் பார்த்தேன். அவை அப்பட்டமான பொய். நான் நலமாக உள்ளேன். அரசியல் பணிகள் வழக்கம் போல் தொடங்குவேன். எதற்கும் பயப்பட வேண்டாம்” என முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (அ)

# நாட்டில் இப்போது சிறுவரின் பனடோல் பாணிகூட இல்லை

## விஜித ஹேரத் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜுலை 07
அரசாங்கம் தற்போது எரிபொருள், அத்தியாவசிய மருந்துகள் உள்ளிட்ட பொருட்களுக்கான தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்து வருவதாக தெரிவித்தாலும் கூட, இன்னும் சிறுவர்களுக்கான பனடோல் பாணி கூட பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அரசாங்கம் டோக்கன் முறைமையில் எரிபொருள் வழங்கப்படாது என்று குறிப்பிட்டிருந்தது. ஆனால் உண்மையில் எரிபொருள் நிலையங்களில் டோக்கன் முறையிலேயே எரிபொருள் வழங்கப்படுகிறது. அமைச்சர்கள் இங்கு ஒன்று கூறுகிறார்கள், ஆனால் வெளியில் வேறொன்று நடக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# நிதி அமைச்சு பதவியிலிருந்து பிரதமர் ரணில் விலகவேண்டும்

## அமைச்சர் தம்பிக்க வலியுறுத்து



கொழும்பு, ஜுலை 07
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நிதியமைச்சர் பதவிலிருந்து விலக வேண்டும் என்று அமைச்சர் தம்மிக்க பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

நாட்டுக்கு டொலர்களை கொண்டு வருவதற்கான அனைத்து வழிகளையும் நிதியமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் தடுக்கிறார் என்று தம்மிக்க பெரேரா குற்றச்சாட்டியுள்ளார்.

எனவே நாடு மேலும் நெருக்கடிக்கு செல்ல இடமளிக்கமாட்டோம் என்று தம்மிக்க பெரேரா மேலும் தெரிவித்தார். (அ)

# மன்னாரில் கரடி கடிக்கு இலக்காகி பலர் காயம்!

## ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி

மன்னார், ஜுலை 07
மன்னார் மாவட்டத்தில் உள்ள வட்டுப்பித்தான் மடு, நானாட்டான், வங்காலை போன்ற பகுதிகளில் அண்மைய நாட்களாக கரடி ஒன்றின் அட்டகாசம் அதிகரித்துள்ள நிலையில் பலர் கரடி கடிக்கு இலக்காகியுள்ளனர்.

அதில் ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சியாக குறித்த கரடியின் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று வரும் நிலையில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் எரிபொருள் பிரச்னை காரணமாக கரடியை பிடிக்க முடியாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்து இரவு நேரங்களில் கரடி மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் நுழைவதாகவும் அதிகாலை நேரங்களில் நடமாடும் மக்களை தாக்குவதாகும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் பொது வைத்தியசாலையில் மிருகக் கடிக்குரிய மருந்து தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் தொடர்ச்சியாக இக் கரடி மக்கள் வசிக்கும் பகுதிக்குச் சென்று மக்களை தாக்குவது பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு மன்னார் பிரதான வீதியில் மீனவர் ஒருவரைக் கரடி தாக்கிய நிலையில்,குறித்த நபர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (அ)

# மன்னார் பொது வைத்தியசாலையில் நாளை விசேட இரத்த தான நிகழ்வு

மன்னார், ஜுலை 07
மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் குருதி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில்,எதிர் வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் விசேட இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் செந்தூர்பதி ராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் நாளை காலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக X + மற்றும் gp+ வகை குருதி க்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஏனைய வகை குருதியும் தேவைப்படுகிறது.

எனவே இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் குறித்த இரத்ததான முகாமில் கலந்து கொண்டு இரத்த தானம் செய்து கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களுக்கு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் செந்தூர் பதி ராஜா அவசர கோரிக்கையை முன்வைத்துள்ளார். (அ)

# கடன் மீளமைப்பு அறிக்கை ஓகஸ்ட் மாதம் வெளிவராது

## சபையில் கூறினார் கபீர் ஹாசிம்



கொழும்பு, ஜுலை 07
எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் கடன் மீளமைப்பு தொடர்பான அறிக்கை வெளியாகும் என்று ரணில் விக்கிரமசிங்க கூறினாலும் அது இடம் பெறாது என்று எதிர்கட்சி தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் இந்த கருத்தை, நேற்று பாராளுமன்றில் வெளியிட்டார்.

இந்த நிலையில் இந்த அறிக்கையை வெளியிட குறைந்தது 6 மாதங்கள் அல்லது ஒரு வருடமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக எதிர் வரும் டிசெம்பர் வரையில் டொலர் பிரச்னை தீவிரமாகும் என்று கபீர் ஹாசிம் தெரிவித்தார். எனவே ஜுலை மாதம் முதல் டிசெம்பர் வரையில் எரிபொருள் உட்பட்ட அவசிய கொள்வனவுகளுக்காக 3 பில்லியன் டொலர்களை பெற்றுக்கொள்வதில் பிரச்னை இருக்கும் என்றும் கபீர் ஹாசிம் எதிர்வு கூறியுள்ளார். (அ)

# மின்சாரக் கட்டமைப்பில் இடையூறு; 2 பொறியியலாளர்கள் பணிநீக்கம்!

கொழும்பு, ஜுலை 07
கடந்த ஜுன் மாத தினம் ஒன்றில் மின்சார கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட இடையூறு தொடர்பில் இரண்டு பொறியியலாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனை நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

குறித்த தினத்தில் மின்சார உற்பத்திக்கான போதுமான நீர் இருந்தபோதும், டீசலைக் கொண்டே மின்சார உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் அனுமதியின்றி மின்சார விநியோகத்தில் தடையும் மேற்கொள்ளப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே இரண்டு பொறியியலாளர்களும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார். (அ)

# திருக்கேதீஸ்வர ஆலய கும்பாபிஷேக பெருவிழா நேற்று சிறப்புற நடந்தது





மன்னார், ஜூலை. 07

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான பாடல் பெற்ற திருத்தலமான மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நேற்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலயப் பிரதம குரு சிவ சிறி தியாகராஜா கருணானந்த குருக்கள் தலைமையில் இடம்பெற்ற மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு கடந்த 30ஆம் திகதி பூர்வாங்க கிரிகைகள் இடம்பெற்றன.

அதனை தொடர்ந்து நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை மதியம் 12 மணி வரை எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

அதனையடுத்து சுவாமிகளுக்கான கிரியைகள் இடம்பெற்றதுடன் யாகப் பூசைகளும் நடைபெற்றன.

நேற்று புதன்கிழமை காலை 9 மணி அளவில் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற்றது. (அ)

## கோட்டா, ரணில் பதவி விலக வலியுறுத்தி சைக்கிள் பேரணி!



கொழும்பு, ஜூலை. 07

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரை பதவியில் இருந்து விலகுமாறு கோரி நேற்றுக் காலை பலப்பிட்டிய நகர மையத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியினரால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் எரிபொருள், எரிவாயு கிடைக்காமல், பொருட்களின் விலை அதிகரித்துள்ள நிலையில் மக்கள் அசௌகரியத்தை சந்தித்துள்ளதாகவும், அதற்கு பொறுப்பேற்று இருவரும் உடனடியாகப் பதவியை விட்டு வெளியேறவேண்டும் எனவும் கோரியே அவர்கள் சைக்கிள் பயணத்தில் ஈடுபட்டனர். (அ)

# பிரதமர் பதவியை ஏற்க நாம் தயார்!

### அனுரகுமார திசாநாயக்க அறிவிப்பு

கொழும்பு, ஜூலை. 07

**பிரதமர் பதவியை ஏற்க தாம் தயாராகவிருப்பதாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேசத்திற்கு மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். தற்போதைய அரசாங்கம் தொடர்பில் உள்நாட்டிலும் சர்வதேசத்திற்கு மத்தியிலும் நம்பிக்கை இல்லை. எனவே, தற்போது நம்பிக்கை மிகுந்த நிலையானதொரு ஆட்சிக்கான தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்தநி லையில் குறுகிய காலத்தில் நாட்டை மீட்டெடுக்க எம்மால் முடியும்.

இதற்காக ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவியில் இருந்து விலக வேண்டும்-என்றார். (அ)



## பதவி விலக வலியுறுத்தல் பதிலளிக்க பிரதமர் மறுப்பு!

கொழும்பு, ஜூலை. 07

நிதியமைச்சர் பதவியில் இருந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாக விலகவேண்டும் என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக பெரேரா வலியுறுத்தியுள்ள நிலையில் இது குறித்து நேற்று பாராளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்காது பிரதமரும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க மௌனம் காத்தார்.

தம்மிக்க பெரேரா வெளியிட்டுள்ள கருத்து குறித்து ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

ஆனால், அந்தக் கேள்விக்கு பிரதமர் பதிலளிக்கவில்லை.

நிதியமைச்சர் என்ற வகையில் பிரதமரிடம் முறையான திட்டங்கள் எதுவும் இல்லை. நாடு இன்றுவரை மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வரும் நிலையில் நாட்டை மீட்கும் முயற்சியில் நிதியமைச்சர் தோல்வி அடைந்து விட்டார். நாட்டுக்கு மேலும் பேரழிவை ஏற்படுத்தும் திட்டங்களையே அவர் வகுத்துள்ளார் என தம்மிக பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக அண்மையில் தம்மிக பெரேரா சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். பின்னர் அவர் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டமை தெரிந்ததே. (அ)

## எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காண எதிரணியின் ஒத்துழைப்பு வேண்டும்!

### அமைச்சர் காஞ்சன விஜேசேகர அழைப்பு

கொழும்பு, ஜூலை. 07

நாட்டின் எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அமைச்சர் காஞ்சன விஜேசேகர எதிர்க்கட்சியினருக்கு அழைப்பு விடுத்தார்.

பாராளுமன்றத்தில் 225 பேரும் பிரிந்து நின்று ஒருவரையொருவர் விரல் நீட்டி செயற்பட்டு மக்கள் எதிர்பார்க்கும் எதனையும் மேற்கொள்ள முடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

எரிபொருள் கொள்வனவு பெரும் சவாலாகியுள்ள நிலையில் மாதாந்தம் எரிபொருள் கொள்வனவுக்காக 500 மில்லியன் டொலர் நிதி தேவைப்படுவதாக தெரிவித்த அமைச்சர், எதிர்வரும் 8ஆம் திகதி நாட்டுக்கு வரவுள்ள எரிபொருள் கப்பலுக்கான நிதியை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நெருக்கடி நிலைமைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பொறுப்புக் கூறவேண்டியவர்கள். உரிய தீர்வுகளை உரிய காலத்தில் எடுக்காமையும் இந்த நெருக்கடிக்கு காரணமாகும்.

எரிபொருளை கொள்வனவு செய்வதும் அமைச்சர் அல்லது பிரதமரின் வேலையென அவர்கள் நினைக்கின்றனர்.

தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் எதிர்வரும் 08ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் வரை எரிபொருள் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன-எனவும் அவர் கூறினார். (அ)

## கொழும்பில் 140 இடங்களில் லிற்றோ எரிவாயு வழங்கல்

கொழும்பு, ஜூலை. 07

கொழும்பில் ஜூலை 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் 140 இடங்களில் லிற்றோ எரிவாயு விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

ஜூலை 9 ஆம் திகதியன்று எரிவாயு கப்பல் வரவுள்ளதாகவும், இதனையடுத்து ஜூலை 11 ஆம் திகதி முதல் விநியோகம் ஆரம்பிக்கும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் ஜூலை 11 மற்றும் 12 ஆகிய திகதிகளில் தலா 100 கொள்கலன்கள் வீதம் 140 இடங்களில் 12.5 கிலோ எடையுள்ள 140,000 எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன் பின் நாளாந்தம் மொத்தம் 25,000 கொள்கலன்கள் விநியோகிக்கப்படும் என்று ரணில் குறிப்பிட்டார். இந்தநிலையில் ஜூலை இறுதி அல்லது ஆகஸ்ட் முதல் வாரத்தில் எரிவாயு தட்டுப்பாடு தீர்க்கப்படும் என்று நம்பிக்கை தெரிவித்த அவர், அடுத்த நான்கு மாதங்களுக்குள் தட்டுப்பாடு இல்லாமல் சமையல் எரிவாயுவை வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தேர்தல்களின் ஊடாக முறைமை மாற்றமும் அரசியல் மாற்றமும்

கலாநிதி ஜெகான் பெரேரா

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றபோது படுமோசமான பொருளாதார நிலைவரத்தில் பெரிய மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. உலகளாவிய மந்தபோசாக்கு நிலைவரத்தில் இலங்கை 7வது இடத்துக்கு வருகின்ற அளவுக்கு பொருளாதார நெருக்கடி தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கப்பல் வந்தால்தான் சாப்பாடு என்கிற நிலையில் நாடு வாழ்கிறது. எரிபொருள் கப்பல் ஒன்றின் வருகை தாமதித்தாலோ அல்லது ரத்துச்செய்யப்பட்டாலோ பாரிய இடர்பாடுகளை எதிர்நோக்கவேண்டியிருக்கிறது.

புதிய பிரதமர் பதவியேற்று 6 வாரங்களுக்கும் கூடுதலான காலம் கடந்துவிட்டது. அவர் முகங்கொடுக்க வேண்டிய பிரச்சினைகள் கடுமையாக அதிகரித்துவிட்டன. பொருளாதார நிலைவரத்தில் எந்தவித மேம்பாடும் ஏற்படவில்லை. மாறாக நிலைவரம் மேலும் மோசமடைந்திருக்கிறது. இன்னமும் திறந்திருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முன்னால் மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்கிறார்கள். சிறிய எண்ணிக்கையான நிரப்பு நிலையங்களே திறந்திருக்கின்றன. பெரும்பாலானவை மூடப்பட்டுவிட்டன.

படிப்படியாக அரசாங்க அலுவலகங்கள் பலவும் மூடப்பட்டு வருகின்றன. ஊழியர்களை வீட்டில் இருந்து வேலை செய்ய அனுமதிக்கும் கொள்கை நீடிக்கப்படுகின்றது. பாடசாலைகளும் மூடப்படுகின்றன. எரிபொருட்கள் இல்லாததால் சொற்ப எண்ணிக்கையான வாகனங்களையே வீதியில் காணக்கூடியதாக இருக்கிறது. பாடசாலைகள் மேலும் இரு வாரங்களுக்கு மூடப்பட்டிருக்கின்றன.

போதிய போசாக்கு இன்மையாலும் கற்பதற்கான வாய்ப்புகள் இன்மையாலும் இளந்தலைமுறை உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் குன்றுவதற்கு அரசாங்கம் வழிவகுக்கின்றது போன்று தோன்றுகிறது. பெரும்பாலும் சகல பல்கலைக்கழகங்களும் இணையவழி மூலமே வகுப்புக்களை நடத்துகின்றன. இணையவழிக் கல்வி பயனுறுதியுடையதல்ல என்று பல்கலைக்கழக ஆசிரியர்கள் கருதுகின்ற போதிலும் வேறு வழியில்லை.

பிரதமர் விக்கிரமசிங்க பதவியேற்றபோது மக்களால் இனிமேலும் விரும்பப்படாத ஒரு அரசாங்கத்தின் பிரதமராக வருவதற்கு அவருக்கு தார்மீக உரிமையில்லை என்று பெருமளவு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், அரசியலில் இருக்கின்ற பரந்தளவு அனுபவம், பல துறைகளிலுமான அறிவாற்றல் மற்றும் சர்வதேச மதிப்பு ஆகியவை காரணமாக அவர் நேர்மறையான வேறுபாட்டை ஏற்படுத்துவார் என்று எதிர்பார்ப்பும் இருந்தது. வேறு எந்த நியாயப்பாடும் இருக்கவில்லை. அவரது வருகைக்கு ஜனநாயக நியாயப்பாடு அறவே இல்லை. ஏனென்றால் 2020 பாராளுமன்ற தேர்தலில் அவரது ஐக்கிய தேசிய கட்சி முற்று முழுதாக துடைத் தெறியப்பட்டது. முன்னைய பாராளுமன்றத்தில் 105 ஆசனங்களைக் கொண்டிருந்த கட்சி இரவோடிரவாக ஒரு ஆசனத்துக்கு குறைக்கப்பட்டது.



தேசியப்பட்டியல் மூலமாக கிடைத்த அந்த ஒரு ஆசனத்தை பயன்படுத்தி விக்கிரமசிங்க பாராளுமன்றம் வந்தார். பொருளாதார நெருக்கடியில் மூழ்கிக் கிடக்கும் நாட்டை மீட்பதற்காக பிரதமர் பதவியேற்பதாக கூறுவதைத் தவிர அவருக்கு வேறு நியாயப்பாடு இருக்கவில்லை.


### வருத்தம் தெரிவிப்பு

மே 9 மூண்ட மக்கள் கிளர்ச்சியினால் தடுமாறிக்கொண்டிருந்த ஒரு அரசாங்கத்தில் பிரதமர் விக்கிரமசிங்க இணைந்தார். அந்த விதிவசமான தினத்தில் கட்டுக்கடங்காத வன்முறைகளை நாடு கண்டது. எதிர்காலத்தில் நாடு எந்தளவு பயங்கரமான நிலைவரத்தைச் சந்திக்கப்போகிறது என்பதற்கு அது கட்டியம் கூறியது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களினாலும் ஆதரவாளர்களினாலும் தூண்டிவிடப்பட்ட வன்முறைகளைத் தொடர்ந்து பிரதமர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்ச விலகியதையடுத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவியில் இருந்து இறங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. 15 அமைச்சர்களைக் கொண்ட சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதாகவும் புதிய தேர்தலை நடத்துவதாகவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க சர்வஜனவாக்கெடுப்பை நடத்துவதாகவும் கூட ஜனாதிபதி உறுதியளித்தார்.

உறுதியளித்த அந்த பாதையில் அவர் செல்லாமல் இருப்பதற்கு பிரதமர் விக்கிரமசிங்கவின் வருகை சாக்குப்போக்காக அமைந்துவிட்டது என்று மக்கள் மத்தியில் இன்று பலத்த ஏமாற்றமும் கோபமும் தோன்றியிருக்கிறது.

அரசாங்கம் இன்று தன்னை வலுப்படுத்திக்கொண்டுள்ளது. பெரிய அமைச்சரவை மற்றும் தவறான முகாமைத்துவம் என்று பழைய சீர்கேடுகள் எல்லாம் மீண்டும் வந்துவிட்டன. அமைச்சரவையில் இன்று 20 பேர் அங்கம்வகிக்கின்றனர். ஊழல்களுடன் சம்பந்தப்பட்ட பேர்வழிகள் உட்பட மேலும் பலர் அமைச்சர்களாக நியமிக்கப்படவிருக்கிறார்கள். சுமார் 20 இராஜாங்க



அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் கூட நியமிக்கப்படவிருப்பதாக கூறப்படுகிறது. இறுதியாக வந்த செய்திகளின் படி மாவட்ட அமைச்சர்களும் நியமிக்கப்பட்டால் மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கை 60 ஐ தாண்டிவிடும்.

இந்த அரசாங்கத்தின் உறுப்பினர்கள் தாங்கள் முன்னர் செய்த தவறுகளுக்காக விரைவாகவே வருத்தம் தெரிவித்துவிடுகிறார்கள். தனது தவறுகளுக்காக ஜனாதிபதி ராஜபக்ச வருத்தம் தெரிவித்தார். ஆனால் தனது எஞ்சிய பதவிக் காலத்துக்கு ஆட்சியதிகாரத்தில் தொடரப்போவதாகவும் அவர் அறிவித்தார். சக்தி, வலு அமைச்சரும் வருத்தம் தெரிவிப்பதில் ஜனாதிபதியை பின்பற்றுகிறார். எரிபொருட்களை ஏற்றிக்கொண்டு துறைமுகத்துக்கு வரும் கப்பல்கள் குறித்து மக்கள் மத்தியில் நம்பிக்கையை தோற்றுவிக்கக்கூடிய அறிவிப்புக்ளை வெளியிட்டுவிட்டு பிறகு கப்பல்கள் வருவது தாமதமானால் அல்லது ரத்துச் செய்யப்பட்டால் அவர் உடனடியாகவே வருத்தம் தெரிவித்துவிடுகிறார்.

ஆனால் இப்போது கப்பல்கள் வருவதாக இல்லை. அடுத்த கப்பல் எப்போது வரும் என்ற உத்தரவாதமும் இல்லை. அதேவேளை அரசாங்க அலுவலகங்களையும் பல்கலைக்கழகங்களையும் பாடசாலைகளையும் மூடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இழைக்கப்பட்ட தவறை ஏற்றுக்கொள்வதற்கு அப்பால், மன்னிப்புக் கோரல் என்பது வேறு இரு விடயங்களையும் உணர்த்திநிற்கிறது. அதாவது ஒன்று மன்னித்துக்கொள்ளுமாறு மானசீகமாக வேண்டுவது. மற்றையது நடத்தையில் மாற்றத்துக்கான சான்று. ஆனால், உண்மையான வருத்தம் தெரிவிப்பின் இந்த இரு அம்சங்களும் இலங்கையின் அரசியல் தலைவர்களினால் வெளிப்படுத்தப்படுவதில்லை. அவர்கள் வருத்தத்தை தெரிவித்துவிட்டு பழைய படி செயற்படத் தொடங்குவார்கள்.

இந்த குணாதிசயத்தின் பிந்திய வெளிப்பாடாக அரசியலமைப்புக்கான 21வது திருத்தம் தொடர்பான அணுகுமுறைகள் அமைகின்றன. தற்போது பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்படவிருக்கின்ற 21 வது திருத்தச்சட்டமூலம் ஆரம்பத்தில் கூறப்பட்ட வரைவைவிடவும் மிகவும் வேறுபட்டதாகும். மூல முதல் திருத்தவரைவு அறகலய போராட்ட இயக்கமும் பரந்த சிவில் சமூகமும் வேண்டிநின்ற “முறைமை மாற்றத்தின்” (System change) ஒரு பகுதியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அந்த வரைவு ஜனாதிபதியின் மட்டுமீறிய அதிகாரங்களை அகற்றி பாராளுமன்றத்தை வலுப்படுத்துவதாக அமைந்திருந்தன.

### விரைவில் தேர்தல்

துரதிர்ஷ்டவசமாக, 21வது திருத்தத்தினால் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படப்போவதில்லை என்பதற்கான அறிகுறிகளே தெரிகின்றன. அது எப்போதும் போலவே ஜனாதிபதியை பலம்பொருந்தியவராக வைத்திருக்கப் போகிறது. அவரே பிரதமரையும் அமைச்சர்களையும் அமைச்சுக்களின் செயலாளர்களையும் நியமிக்கப்போகிறார், தனது விருப்பப்படி நீக்கவும் போகிறார்.

இந்த அதிகாரங்களைக் கையில் வைத்துக்கொண்டு ஜனாதிபதி அரசாங்கத்தின் போக்கை தீர்மானிக்கக் கூடியவராக இருப்பார். இரவோடிரவாக இரசாயனப்பசளை வகைகளுக்கும் களைகொல்லிகளுக்கும் தடைவிதித்தது போன்ற தீர்மானங்களை எடுக்கவும் போகிறார்.

பாராளுமன்றத்தில் தனது கட்சியின் தன்னந்தனி உறுப்பினராக இருக்கும் பிரதமர் விக்கிரமசிங்கவினால் எவ்வளவு காலத்துக்கு பதவியில் தொடரவும் ஜனாதிபதியின் நம்பிக்கையை தொடரவும் கூடியதாக இருக்கும் என்பது பெரிய கேள்வி.

(09 ஆம் பக்கம் பார்க்க...)



# 22வது திருத்தம் பற்றிய வாதப்பிரதி வாதங்கள்: 10 விடயங்கள்!

■ சாந்தன் கே. தம்பையா



**1** 1978 அரசியல் யாப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. 44 வருடங்களாக தொடர்கிறது. இதுவரை 20 திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போதைய ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்ட 20 வது திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தியது. நாட்டின் துரித வளச்சிக்கு இது தேவை என்று நியாயம் கூறப்பட்டாலும் அது நாட்டை அதல பாதாளத்தில் தள்ளி விட்டது என்பது தெரிந்ததே.

**2** ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைத்து பாராளுமன்றத்திற்கு அதிகாரத்தை கொண்டு வருவதற்காக 21வது திருத்தும் ஒன்றை கொண்டு வர எதிர்க்கட்சிகள் தொடர்ந்து நகர்வுகளை மேற்கொள்ளுகிறார்கள். ஜனாதிபதி இதை தொடர்ந்து மறு தலித்து வந்தாலும் ஏற்பட்ட பொரு ளாதார நெருக்கடிகள், பொருட் களின் தட்டுப்பாடு, விலைவாசி ஏற்றம் காரணமாக மார்ச் மாதத்திலி ருந்து ஆரம்பித்த மக்கள் போராட் டங் கள் உக்கிரமடைந்ததால் முதலில் அமைச்சரவையும் அதனை தொடர்ந்து மே 9ம் திகதி பிரதமரும் ராஜினாமா செய்யவேண்டி வந்தது. நாட்டில் ஆட்சி மற்றம் தொடர்பான நம்பிக்கையும் தோன்றியது.

**3** சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் சுமந்திரனின் ஆலோசனையுடன் 21 ஏ நகல் ஒன்றை தயாரித்தனர். அந்த நகல் உச்ச நீதி மன்றத்தால் பரிசீலிக்கப்பட்டு பல சரத்துகள் அரசியலமைப்பு சட்டத்திற்கு முரணா னதாக இருப்பதால் பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டாலும் சர்வஜன வாக்கெடுப்பிற்கு உட்படுத்தப்படல் வேண்டுமென்று அறிவித்தத்தை தொடர்ந்து கிடப்பில் போடப்பட்டுள்ளது.

**4** இதற்கிடையில் புதிய மந்திரிசபையில் நீதி அமைச்சராக பதவியேற்ற விஜயதாச ஜனாதி பதியின் அதிகாரத்தை மட்டுப் படுத்துவது தொடர்பாக 22ஏ எனும் ஒரு வரைபை சமர்ப் பித்தார். இது மந்திரி சபையால் ஏற்றுக்கொள்ளப் பட்டு ஜூன் 29ம் திகதி அது தொடர்பான வர்த்தமா னியும் வெளியிடப்பட்டுள்ளது.

இது அரசியல் அமைப்புக்கு முரணான சரத்துக்களை கொண்டிருப்பதாக யாராவது கருதினால் ஜூலை மாதம் 6ம் திகதிக்கு முன்னர் உச்ச நீதிமன்றில் வழக்கு தொடரலாம் அப்படியில்லாத பட்சத்தில் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப் படும். அங்கு அது மூன்றில் இரண்டு பெரும்பான் மையை பெ றும் பட்சத்தில் அது 21வது அரசியல் திருத்தச்சட்டமாக அங்கீகரிக்கப்படும்.

**5** 22A பொதுஜன முன்னணியால் கொண்டுவரப்படுவதால் , எதிர்கட்சியினரும் ஆதரவளித்தால் அது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறும். இந்த திருத்தத் தில் 19 ஏ யிலிருந்த சில அம்சங்கள் உள்ளடக்கப்பட் டிருக்கின்றது, முக்கியமாக ஜனாதிபதியின் விருப் பத்தின் பெயரில் பிரதமரை விலக்க முடியாது, மந்திரி சபை நியமனங்கள் பிரதமரின் ஆலோசனை அனுசரணையுடன் தான் செய்யப்படலாம், இவை 20 ஏ யுடன் ஒப்பிடும் போது ஜனாதிபதியின் அதிகா ரத்தை ஓரளவிற்கு கட்டுப்படுத்தும்.

இச்ச ட்டம் நிறைவேற் றப்பட்டாலும் பாராளு மன்றத்திற்கு முழுமையான அதிகாரங்கள் மாற்றப் படாது என்பது உண்மையே ஆனால் 20ஏ யிலுள்ள எதேச்சதிகாரப்பிடியை ஓரளவிற்கு தளர்த்தும் என் பதுவும் உண்மை.

**6** அப்படியெனில் 20ஏ யின் அதிகாரங்களை குறைக்கும் 22 ஏ யை கொண்டுவருவதற்கு ஜனாதிபதி ஏன் இணங்கினார் என்கின்ற கேள் வியும் உண்டு. இந்த 22 ஏ யில் இந்த ஜனாதி பதியின் பதவிக்காலம் வரை -2024 வரை- ஜனாதி பதியே வைத்திருப்பார். ஜனாதிபதியின் அதிகாரங் களை மட்டுப்படுத்தும் சரத்துக்கள் அடுத்துவரும் ஜனாதி பதியின் பதவிக்காலத்தி லிருந்தே அமுலுக்கு வரும் என்றுள்ளது.

இதனை எதிர்க்கட்சிகள் ஏறுகொள்ளவில்லை என்பதுடன், பெரும்பாலான மக்களின் நம்பிக் கையை இழந்துவிட்ட இந்த ஜனாதிபதியின் நம்பகத் தன்மையை மீளமைக்கும் முயற்சியாகவே முடியும் என்பது அவர்களது வாதம்.

**7** இந்த சட்டமூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறாத பட்சத்தில் ஜனா திபதியின் நிறைவேற்று அதிகாரம் தொடர்பாக தற்போதுள்ள 20ஏ தான் தொடர்ந்து இருக்கும் என்பதே உண்மையான நிலையாகும். சர்வதேச கடன்வழங்குவோரின் அழுத்தங்களினாலோ , மக்கள் போராடங்களி னாலோ - இந்த பாராளு மன்றத்தினூடாக ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட் டாலும் அதற்குப்பின் புதிய அரசொன்று வரும்போதும் கூட 20ஏ யே அமுலில் இருக்கும்.

**8** அதிகரித்துவரும் பொருளாதார நெருக்கடிகளும் மக்கள் போராட்டங் களும் இந்த ஆட்சியை மாற்றும் வரை தொடரும் என்றே எதிர்பாக்கப்படுகிறது. ஜனாதிபதி ராஜினாமா செய் வதன் மூலமோ அல்லது தற் போதுள்ள 20ஏ படி ஜனா திபதி பாராளுமன் றத்தை கலைப்பதன் மூலமோ மாற் றத்தை ஏற்படுத்தினாலன்றி 2024 வரை ஜனாதிபதியோ , அல்லது 2025 வரை இந்த பாராளுமன்றமோ மாற்றப்படும் சந்தர்ப்பங்கள் மிகமிக குறைவு,

**9** எனவே பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மாற்றத்திற்கான போராட் டங்கள் தொடரும். ஜனநாயக மாற்றத்தை வேண்டிநிற்போர் நடைபெறும் போராட் டங்களை முழுமையாக ஆதரிக்கும் அதேவேளை யில் குறைபாடுகளுடனென்றாலும் 22 ஏ யை ஆதரிப்பதன் மூலம் 20 ஏ யிலுள்ள எதேச்சதிகார சரத்துக்களை அரசியல் யாப்பில் மட்டுப்படுத்தலாம் என்கின்ற வாதமும் நியாயமானதே.

குறிப்பாக எதிர் கட்சியினரிடம் மாற்று திட்டம் எதுவும் இல்லை என்பதும், வெளிநாடுகளினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் நிகழ்ச்சி நிரலுக் கேற்ப ஆட்கள் மாற்றப்படலாமேயொழிய ஆட்சி முறையில் மாற்றம் (System Change) ஏற்படுவதற்கான எந்த அறிகுறிகளும் இல்லை என்பதுவும் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

**10** இந்த வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்துகொண்டிருக்கையில் தமிழ் தேசிய தரப்பு என்று சொல்லிக்கொள் வோரே “சிவனே” என்று லண்டன், ஆம்ஸ்டர்டம், சூரிச், ஒஸ்லோ, நியூ யோர்க என்று சுற்றித் திரிகிறார்கள். இந்த அரசு தொடர்ந்தால் அவர்களுக்கு ஆலோசனை வழங்குபவர்களாகவும், ஆட்சி மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாற்றத்தின் பங்களர்களாகவும் எப்படி தங்களை தகவமைத்துக் கொள்ளலாம் என்பதிலேயே அவர்களது முழுக் கரிசனையும் இருப்பதுபோல் தெரிகின்றது. ஆடுகிற மாட்டை ஆடிக்கறக்கும், பாடுகிற மாட்டை பாடிக்கறக்கும் வித்தையை நன்கு கற்றுக்கொண்ட வர்கள் அவர்கள். பாவம் மக்கள்.

---

## தேர்தல்களின் ஊடாக ...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதமர் அரசாங்கத்தில் உள்ள தனது கட்சியைச் சாராத 60க்கும் அதிகமான அமைச்சர்களையும் 224 பாராளுமன்ற உறுப்பினர்களையும் எவ்வாறு கையாளப்போகிறார்? அவர் கள் எல்லோரும் பழைய ஒழுங்கின்படி பழக்கப்பட்டவர்கள். அதே பாணியில் செயறபடவே விரும்புவர் என்பது நிச்சயம்.

21 வது திருத்தம் தொடர்பில் கடந்த வாரம் சிவில் சமூக அமைப்புக்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. சீர்திருத்தத்திற்கான கூட்டு (Collective for Reform) என்ற சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்கள் கடுமையாக பாடுபட்டு 21வது திருத்தம் தொடர்பில் சிவில் சமூக அமைப்புக் களின் யோசனைகளை விரிவாக ஆராய்ந்து பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு சமர்ப்பிப்பதற்கென்று பொதுவான குறைந்தபட்ச யோச னைகள் தொகுதியொன்றை தாயாரித் திருந்தனர்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், மார்ச்12 இயக்கம், சமூகநீதிக்கான தேசிய இயக்கம், பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம், பவ்ரல், இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம், மக்கள் போராட்ட ஒத்துழைப்பு இயக்கம், இலங்கை வர்த்தக சபை, இலங்கை ட்ரான்ஸ்பரென்சி இன்டர்நாஷனல், சோசலிச மாணவர்கள் சங்கம், அர சாங்க வைத்தியர்கள் சங்கம் உட்பட பல அமைப்புக்களின் யோசனைகளை அவர்கள் ஆய்வுக்குட்படுத்தியிருந்தனர்.

கலந்துரையாடலில் பங்குபற்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் நிகழ்த் திய உரைகளில் சிவில் சமூகத்தின் யோசனைகளில் தங்களது சொந்த யோசனைகள் உள்ளடக்கப்பட்டதாக உரிமை கோரியது மாத்திரமல்ல முற்றிலும் வித்தியாசமான போக்கில் கருத்துக்களை வெளியிட்டு தங்களது கடந்தகால,நிகழ்கால சொந்த நடத்தைகளை நியாயப்படுத்தியதையும் காணக்கூடியதாக இருந்தது.


கலந்துரையாடல் முடியும்வரை ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத் திரமே இருந்தனர். கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் ஒன்றுக்கொன்று முரண்பாடான 17வது, 18வது, 19வத, 20வது அரசியலமைப்பு திருத்தங்களுக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள். தற்போது வரவிருக்கும் மிகவும் பலவீனமான 21வது திருத்தத்துக்கும் இவர்கள் ஆதரவாக வாக்களிப்பார்கள் என நம்பலாம்.

அறகலய போராட்டக்காரர்களி னால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்ற இளைய தலைமுறை நேர்மையும் கொள்கைப்பிடிப்பும் இல்லாத இந்த நடத்தைகளையெல்லாம் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

இலங்கைக்கு முறைமை மாற்றம் மாத்திரமல்ல, அரசியல் மாற்றமும் தேவைப்படுகிறது. விரைவில் நடத்தப்படக்கூடிய தேர்தல் ஒன்றின் மூலமாகவே அந்த மாற்றம் வரமுடி யும்.


# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, ............., ...........  ii) 18, 15, 12, ............., ...........

**21)**

| | | |
|---|---|---|
| 3, | 9, | 14, |
| 10, | 6, | 12, |

பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

..........................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் $3l$ $300ml$ பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?




.......................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.......................................................  (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)   2)   3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி  2) இரணைமடுக்குளம்  3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்  2) உதிப்பு  3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்  2) வாளேந்திய சிங்கம்  3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976  2) 1851  3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு  2) இறப்பர், தாழம்பூ  3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6  2) 8  **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130  2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745  **23.** 455
**24.** 1l 100ml / 1100ml  **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190  2) 100  3) 290
**27.** 15 : 30  **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1  **31.** 2  **32.** 3
**33.** 2  **34.** 3  **35.** 2

## கல்வி tv CHANNEL-1

**07.07.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**07.07.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சட்டவிரோதமாக ஆஸி. செல்ல முயன்ற 45 பேர் நேற்று திருமலை கடலில் கைது!

திருமலை, ஜூலை. 07
சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 45 பேரை இலங்கைக் கடற்படையினர் நேற்று அதிகாலை கைதுசெய்துள்ளனர்.

திருகோணமலை - குச்சவெளிக் கடற்பரப்பில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட 45 பேரில் 25 பேர் 20 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

கைதான அனைவரும் விசாரணைகளுக்காகக் குச்சவெளி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைத் திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று குச்சவெளிப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கல்வியியல் கல்லூரி மாணவ ஆசிரியர்களை சொந்த இடங்களுக்கு இணைப்பு செய்யுங்கள்

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கோரிக்கை

அம்பாறை, ஜூலை. 07
நாட்டின் பொருளாதார ஸ்திரமற்ற நிலையினைக் கவனத்திற் கொண்டு தேசிய கல்வியியல் கல்லூரி ஆசிரிய மாணவர்களை சொந்த பிரதேசத்துக்கு இணைப்புச் செய்யுமாறு கல்வியமைச்சுக்கு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸா, செயலாளர் எம்.கே.எம்.நியார் ஆகியோர் ஒப்பமிட்டு கல்வியமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நாட்டிலுள்ள 19 தேசிய கல்வியியல் கல்லூரிகளில் இருந்து சுமார் 6000 மாணவர்கள் பாடசாலைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கான வேதனமாக 5000 ரூபாய் வழங்கப்பட்டு வருகின்றது. நாட்டின் தற்போதைய சூழலில் இத் தொகையினால் ஒரு வாரத்தைக் கூடக் கடத்த முடியாதுள்ளது. வெளி மாகாணங்களில் இருந்து வருகை தந்த ஆசிரிய மாணவர்கள் வாடகைக்கு இடங்களைப் பெற்றே தங்கள் பணிகளைத் தொடர வேண்டும். பொருளாதார நெருக்கடியான இக்காலப்பகுதியில் இது மிகவும் கடினமான இலக்காகும்.

இந்நிலைமைகளைக் கருத்திற் கொண்டு மாணவ ஆசிரியர்களை சொந்த வலயத்தில் பொருத்தமான பாடசாலையொன்றில் இணைப்புச் செய்ய வழி செய்வதோடு அவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவையும் அதிகரிப்புச் செய்யவேண்டும்-என்றுள்ளது. (அ)

# மட்டு. போதனா வைத்தியசாலைக்கு முன்னுரிமை அடிப்படையில் டீசல்!



மட்டக்களப்பு, ஜூலை. 07
மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய தேவைக்கான சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் நேற்று முன்தினம் மட்டக்களப்பு ஐ.ஓ.சி ஊடாக டீசல் விநியோகிக்கப்பட்டதாக மட்டக்களப்பு வர்த்தகர் சங்கத்தின் தலைவரும் மட்டக்களப்பு .ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளருமான முத்துக்குமார் செல்வராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்களின் சுகாதார மருத்துவ பாதுகாப்பு நலன் கருதி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய தேவைகளுக்கான சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நோயாளர் காவி வண்டிகள் (அம்புலன்ஸ்) மற்றும் மருந்துப் பொருட்களை கொண்டு செல்லும் வாகனங்கள் போன்ற அத்தியாவசிய வாகனங்களுக்கு எரிபொருளை வழங்கியதுடன் இதன்போது எரிபொருளை பெற்றுக்கொள்ள வீதிகளில் காத்திருந்த வாகனச் சாரதிகளும் தமது ஒத்துழைப்புக்களை வழங்கியதாகவும் முத்துக்குமார் செல்வராசா மேலும் கூறினார். (அ)

# உகந்தை மலை முருகன் ஆலயத்தின் ஆடிவேல் விழா 29 ஆம் திகதி ஆரம்பம்



மட்டக்களப்பு, ஜூலை. 07
வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடி வேல் விழா உற்சவம் இம்மாதம் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 13 நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்று, ஓகஸ்ட் 11 ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையை இருப்பதாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் சுதநிலமே திசாநாயக்க தெரிவித்தார்.

ஆடிவேல் விழா உற்சவத்தை முன்னிட்டு தற்போது நீர்ப்பாசன திணைக்களம், சிவதொண்டன் அமைப்பு உட்பட பல அமைப்புகள் ஆலய வளாகத்தில் சிரமதானத்தில் ஈடுபட்டு வருகின்றன.

விரைவில் உற்சவத்திற்கான ஆலய பரிபாலன சபைக் கூட்டம் நடைபெறவிருப்பதாக தலைவர் தெரிவித்தார். (அ)

# நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் 19 மாணவர்கள் மாகாண மட்டத்திற்கு தெரிவு

அம்பாறை, ஜூலை. 07
கல்முனை வலய மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் 15 தங்கப்பதக்கம் மற்றும் 09 வெள்ளிப்பதக்கம் வென்று மொத்தமாக 19 மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 4ஆம், 05 ஆம் திகதிகளில் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற கல்முனை வலயமட்ட மெய்வல்லுநர் விளையாட்டு போட்டிகளில் நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை 16 வயதுப்பிரிவு மாணவன் எம்.அப்லீத் அஹமட் சம்பியன் பட்டம் பெற்று மாகாண மட்டப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளார். (அ)



# தேசிய துரித பயிர்ச்செய்கை திட்டம் கல்லடி சமுர்த்தி வங்கியில் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஜூலை. 07
நாடு பூராவும் சமுர்த்தி தேசிய துரித பயிர்ச்செய்கை வேலைத்திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் கே.கருணாகரன் தலைமையில், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கல்லடி சமுர்த்தி வங்கியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



தற்போதைய இக்கட்டான காலகட்டத்தில் பயிர்ச் செய்கையை நாமே உருவாக்கி ஏற்பட்டுள்ள உணவு பற்றாக்குறையை ஓரளவேனும் தீர்த்துக் கொள்வதற்கான செயற்திட்டமாகவே இது கருப்படுகின்றது.

மிக முக்கியமாக மரவள்ளி, வற்றாளை,கத்தரி, மிளகாய் போன்ற பயிர்களை நடுவதன் மூலம் நம் அன்றாடத் தேவையை ஓரளவேனும் தீர்ப்பதற்கு இது வழி சமைக்கும். இவ்வேலைத்திட்டம் 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 08 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்துகொண்டதுடன், விசேட அதிதியாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் ஏ.வாசுதேவன் கலந்து கொண்டார்.

இதன்போது உரையாற்றிய அரச அதிபர்-
இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் 31 சமுர்த்தி வங்கிகள் இயங்குகின்றன. அவை அனைத்தும் தற்போது கணினி மயமாக செயற்படுகின்றன. அதற்காக உழைத்த அனைவருக்கும் நன்றி. அதே போன்று நாம் பசுமையான தேசம் வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றதுபோல, சமுர்த்தி தேசிய துரித பயிர்ச்செய்கை வேலைத் திட்டத்தை முன்னெடுத்து செல்லவேண்டும்.

தற்போதைய கால கட்டத்தில் இவ்வாறான வேலைத்திட்டத்தின் மூலம் ஓரளவு நம் பொருளாதார பிரச்னையை தீர்த்துக் கொள்ள முடியும்-என்றார்.

இந்நிகழ்வில் மாவட்ட சமுர்த்தி கணக்காளர் பஸீர், மாவட்ட சமுர்த்தி சிரேஷ்ட முகாமையாளர் து.கு.மனோகிதராஜ், மாவட்ட சமுர்த்தி வங்கிப் பிரிவு முகாமையாளர் நிர்மலாதேவி கிரிதராஜ், மண்முனை வடக்கு பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் பரமலிங்கம், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்கள் கலந்துகொண்டனர். (அ)



## எங்கள் ஆராய்ச்சி குறித்து நாஸா பொய் கூறுவது முதன்முறையல்ல!

### சீனா கடும் விமர்சனம்

பீஜிங், ஜூலை 07

தங்கள் ஆராய்ச்சி குறித்து பொய் கூறுவது நாஸாவுக்கு இது முதன்முறை அல்ல என்று சீனா கடுமையாக விமர்சித்துள்ளது.

வர்த்தகம் மட்டுமல்லாது விண்வெளி குறித்த ஆராய்ச்சி போட்டியில் சீனா, அமெரிக்கா இடையேயான மோதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

சமீபத்தில் நாஸாவின் தலைவர் பில் நெல்சன் அளித்த பேட்டியில்,

“விரைவில் சீனா நிலவுக்கு உரிமை கோரும் மற்ற நாடுகளின் விண்வெளி ஆராய்ச்சிகளைத் தடுக்கும்” என்று கூறியிருந்தார். மேலும், “சீனா மற்ற நாடுகளிலிருந்து தொழில்நுட்பங்களை திருடுகிறது . பிற நாடுகளின் செயற்கைக் கோள்களை அழிக்கிறது” என்றும் விமர்சித்திருந்தார்.

இதுகுறித்து கருத்து பகிர்ந்துள்ள சீன வெளியுறவுத் துறை அமைச்சகம், “சீனாவின் விண்வெளி ஆய்வு குறித்து நாஸா பொய் கூறுவது முதன்முறை அல்ல. சமீப ஆண்டுகளாக விண்வெளியை போர் செய்யும் களமாகவே அமெரிக்கா வரையறுத்து வருகிறது” என்று தெரிவித்துள்ளது.

சீனாவின் விமர்சனத்துக்கு நாஸா தரப்பிலிருந்து இதுவரை எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

இந்த நிலையில், கம்போடியா, லாவோஸ், மியான்மர், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் அதிகாரிகளுடன் திங்களன்று நடந்த சந்திப்பின்போது, சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி, சீனா மற்றும் ரஷ்யாவின் ஆதரவுடன் நிலவில் அல்லது அதற்கு அருகில் உள்ள சர்வதேச நிலவு ஆராய்ச்சி நிலையத்தில் சேர்ந்து பணி செய்ய தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். (ஐ)

### இங்கிலாந்து அரசியலில் பரபரப்பு:

## இரு அமைச்சர்கள் இராஜிநாமர் நெருக்கடியில் பிரதமர் ஜோன்சன்

இங்கிலாந்து, ஜூலை 07

இங்கிலாந்து நிதி மற்றும் சுகாதார அமைச்சர்கள் தங்கள் பதவிகளை நேற்று முன்தினம் திடீரென இராஜிநாமா செய்தனர். இதனால், பிரதமர் பொறிஸ் ஜோன்சன் தலைமையிலான அரசாங்கத்துக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பதவி விலகிய அமைச்சர்களுக்குப் பதிலாக அந்தத் துறைகளுக்கு புதிய அமைச்சர்கள் இருவரை பொறிஸ் ஜோன்சன் நியமித்துள்ளார்.

இங்கிலாந்தில் பொறிஸ் ஜோன்சன் தலைமையிலான பழமைவாத கட்சியின் ஆட்சி நடந்து வருகிறது. அந்தக் கட்சியின் துணை கொறடாவாக கிறிஸ் பின்ஷர் என்பவர் செயல்பட்டு வந்தார்.

இந்நிலையில் கடந்த புதன் கிழமை இரவு விடுதி ஒன்றில் 2 ஆண்களிடம் கிறிஸ் பின்ஷர் பாலியல் ரீதியில் அநாகரிகமாக செயல்பட்டாரெனக் குற்றச்சாட்டுகள் கிளம்பின.

அவரின் இந்தச் செயலுக்கு சொந்த கட்சியில் இருந்தே எதிர்ப்புகளும், விமர்சனங்களும் கிளம்பின. இதையடுத்து கிறிஸ் கட்சியின் துணை கொறடா பதவியில் இருந்து இராஜிநாமா செய்தார். தொடர்ந்து பழமைவாத கட்சியின் எம். பி. பதவியில் இருந்தும் அவர் இடைநீக்கம் செய்யப்பட்டார்.



எனினும், ஓர் எம். பி. இவ்வளவு பெரிய தவறு செய்துள்ள நிலையில், பிரதமர் பொறிஸ் ஜோன்சன் சரியான நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்ககள் எழுந்தன.

இது குறித்து பிரதமர் பொறிஸ் ஜோன்சன்மீது கடும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நிதியமைச்சர் ரிஷி சுனக், சுகாதாரத்துறை அமைச்சர் சஜித் ஜாவித் ஆகியோர் தங்கள் பதவியை இராஜிநாமா செய்தனர்.

கிறிஸ் மீதான பாலியல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விவகாரத்தை பொறிஸ் ஜோன்சன் அரசு சரிவர கையாளவில்லை எனக் குற்றஞ்சாட்டியே இருவரும் தங்கள் பதவிகளை இராஜிநாமா செய்தனர்.

இந்த இராஜிநாமா சம்பவம் இங்கிலாந்து அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரு அமைச்சர்களும் இராஜிநாமா செய்த நிலையில் அவர்களுக்கு பதிலாக நதீம் சஹாவி என்பவரை நிதி அமைச்சராகவும், ஸ்டீவ் பார்க்லே என்பவரை சுகாதாரத்துறை அமைச்சராகவும் நியமித்து பொறிஸ் ஜோன்சன் உத்தரவிட்டுள்ளார்.

முன்னதாக பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட கிறிஸ் பின்ஷர் அரச பதவிக்கு தகுதி இல்லாதவர் என்று கூறிய பொறிஸ் ஜோன்சன், அவரின் தவறுக்காக பகிரங்கமாக மன்னிப்பு கேட்டார். (ஐ)



## யேமன் ஆயுத கிடங்கில் விபத்து; 10 பேர் மரணம் 60 பேர் காயம்!

சனா, ஜூலை 07

யேமன் நாட்டின் இராணுவ தளத்தில் உள்ள ஆயுத சேமிப்பு கிடங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வெடிவிபத்தில் 10 பேர் பலியாகினர். 60 பேர் காயமடைந்தனர்.

தெற்கு யேமன் - அபியான் மாகாணத்தில் உள்ள லாடார் நகரின் ஆயுதக் கிடக்கிலேயே இந்த வெடி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தல் கட்டடங்கள் இடிந்தன. அயலிலுள்ள பல வீடுகளும் பாதிக்கப்பட்டன.

இந்த வெடி விபத்து தற்செயலாக நடந்ததா? அல்லது திட்டமிட்ட தாக்குதலா? என்பது குறித்து பாதுகாப்பு படையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

யேமனில் அரச படையினருக்கும், ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே பல ஆண்டுகளாக சண்டை நீடித்து வருகிறது. நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மன்சூர் ஹாதிக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் தாக்குதலை தொடங்கினர். இந்த உள்நாட்டுப் போரில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை ஈரான் ஆதரிக்கிறது. அதேபோல் யேமன் அரசுக்கு சவுதி தலைமையிலான கூட்டுப்படைகள் ஆதரவு அளிக்கிறது.

பல ஆண்டுகளாக போர் நீடித்து வரும் நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் ஜனாதிபதி மன்சூர் ஹாதியின் அதிகாரம் அனைத்தும் ரஷித் அல் அலிமினி தலைமையிலான ஜனாதிபதி தலைமை பேரவைக்கு மாற்றப்பட்டது.

எனினும் யேமன் அரச படையினருக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே தொடர்ந்து சண்டை நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இத்தாலியில் கடுமையான வறட்சி 5 மாகாணங்களில் அவசர நிலை!

ரோம், ஜூலை 07

இத்தாலியில் நிலவும் கடும்வெப்பம் காரணமாக அங்கு கடும் வறட்சி நீடிக்கிறது. இதனைத் தொடர்ந்து 5 மாகாணங்களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து சர்வதேச ஊடகங்கள் தரப்பில்,

“இத்தாலியின் மிக நீளமான போ நதியை ( போ நதி அளவு 650 கிமீ) சுற்றியுள்ள 5 மாகாணங்களில் கடும் வறட்சி நிலவுகிறது. இந்த வறட்சியினால் நாட்டின் விவசாய உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் 30வீதத்துக்கும் அதிகமான விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

வறட்சி தடுக்கும் பொருட்டு வடக்கில் உள்ள ஐந்து மாகாணங்களில் (லோம்பார்டி, எமிலியா-ரோமக்னா, பிரியூலி வெனிசியா கியுலியா, பீட்மாண்ட் மற்றும் வெனெட்டோ) இத்தாலி அரசு அவசர நிலையை அறிவித்துள்ளது.

வறட்சி கடுமையாக ஏற்பட்டுள்ள 5 மாகாணங்களில் தண்ணீர் பற்றாக்குறையை நீக்க சுமார் 36.5 மில்லியன் யூரோவை இத்தாலி அரசு ஒதுக்கியுள்ளது” என்று செய்தி வெளியிட்டுள்ளன.

வறட்சியை கட்டுப்படுத்தவே அவசர நிலை பிரகனடம் செய்யப்பட்டுள்ளதாக இத்தாலி அரசு தெரிவித்துள்ளது. மேலும் வறட்சி நிலைமையை சமாளிக்க சிறப்பு குழுவையும் அமைத்துள்ளது.

கடந்த 70 ஆண்டுகளில் இல்லாத வறட்சியை இத்தாலி எதிர்கொண்டுள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)



## மியன்மார் எல்லையில் இரு தமிழர்கள் கொலை!

மணிப்பூர், ஜூலை 07

மியன்மார்  நாட்டில் செயல்படும் தீவிரவாதிகளால் 2 தமிழர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். முச்சக்கர வண்டி சாரதியான மோகன் (28 வயது) மற்றும் வியாபாரியான ஐயனார் (35 வயது) ஆகிய இருவரே இவ்வாறு சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

பியூ ஷா தீ என்னும் ஆயுதம் ஏந்திய பயங்கரவாத குழுவினர் இவர்களைச் சுட்டுக்கொன்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மியன்மார் எல்லையான டாமு என்ற பகுதியில் இவர்கள் இருவரின் சடலங்களும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டன.

இந்தப் படுகொலைகளை அடுத்து இந்தியா - மியன்மார் எல்லையில் உள்ள மோரே பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. கடைகள் அடைக்கப்பட்டு இயல்பு வாழ்க்கை ஸ்தம்பித்துள்ளது.

இந்தியாவின் மணிப்பூர் எல்லை நகரமான மோரே பகுதியில் இருந்து சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞர்கள் இருவரும் மியன்மார் எல்லைக்குள் உள்ள டாமு பகுதிக்கு பயணித்துள்ளனர். இதன்போதே டாமு பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் இவர்களைச் சுட்டுக் கொன்றனர் என்று கூறப்படுகிறது.

1995ஆம் ஆண்டு எல்லை வர்த்தகம் சட்டப்பூர்வமாக்கப்பட்டதால், இந்திய மற்றும் மியன்மார் நாட்டினர் வணிகத்திற்காக சட்டபூர்வமாக எல்லை நகரங்களுக்குச் செல்வதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களின் கொலைகள் பற்றிய செய்தி கிடைத்ததும் மோரேவில் அனைத்து கடைகளும் மூடப்பட்டன. அங்கு இயல்பு வாழ்க்கை ஸ்தம்பித்தது. மோரேவிலிருந்து இம்பாலுக்கு தனியார் கார்கள் உட்பட எந்த வாகனங்களும் அனுமதிக்கப்படவில்லை. மோரேயில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட பொலிஸார் அங்கு பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, சுட்டுக்கொல்லப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களும் என்ன காரணத்துக்காக மியன்மார் சென்றனர் எனத் தெரியவில்லை. இது குறித்த விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

ஈழநாடு





# முதல் 10 இடங்களை தவறவிட்ட கோலி!

டுபாய், ஜூலை 07

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ. சி. சி.) டெஸ்ட் கிரிக்கெட் துடுப்பாட்ட தரவரிசையில் இந்தியாவின் விராட் கோலி முதல் 10 இடங்களுக்குள் இடம்பிடிக்க தவறிவிட்டார். கடந்த ஆறு ஆண்டுகளில் இந்த இடத்துக்குள் கோலி இடம்பெறாமல் இருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இதேசமயம், தரவரிசையில் இலங்கையின் டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்னவும் ஓர் இடம் கீழிறங்கி 8ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

தரவரிசையில் இங்கிலாந்து அணியின் ஜோ ரூட் தொடர்ந்து முதலிடத்தில் நீடித்து வருகிறார். இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மற்றொரு வீரரான ஜொனி பெயர்ஸ்ரோ 10ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இதேசமயம் 10ஆவது இடத்தில் நீடித்திருந்த இந்தியாவின் ரிஷப் பந்த் 5 இடங்கள் முன்னேறி ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இதேசமயம், இந்தியா - இங்கிலாந்து தொடரில் பிரகாசிக்கத் தவறிய கோலி, முதல் 10 இடங்களை தவறவிட்டு 13ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். அவரின் மோசமான துடுப்பாட்டமே இந்தப் பின்னடைவுக்குக் காரணம். (ஐ)



# விம்பிள்டன் ரென்னிஸ் ஜபீர் அரையிறுதியில் !

லண்டன், ஜூலை 07

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு ஒன்ஸ் ஜபீர், தட்சனா மரியா ஆகியோர் முன்னேறினர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடக்கிறது.

இதில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடந்த காலிறுதி ஆட்டம் ஒன்றில் செக் குடியரசின் மேரி பௌஸ்கோவா, துனீசியாவின் ஒன்ஸ் ஜபீருடன் மோதினார்.

சவாலான இந்தப் போட்டியில் 3-6, 6-1, 6-1 என்ற செற்கள் கணக்கில் வெற்றி பெற்ற ஒன்ஸ் ஜபீர் அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் தரவரிசையில் 97ஆவது இடம் வகிக்கும் ஜேர்மனியின் ஜூலி நீமையர், சக வீராங்கனை தட்சனா மரியாவுடன் மோதினார். இதில் தட்சனா மரியா 4-6, 6-2, 7-5 என்ற நேர் செற்களில் வென்று அரையிறுதிக்குள் நுழைந்தார். (ஐ)

## எல். பி. எல். தொடர்

# அணி வீரர்கள் ஒதுக்கீடு நிறைவு! 3 யாழ்ப்பாண வீரர்களுக்கு இடம்!!

கொழும்பு, ஜூலை 07

எல். பி. எல். தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் யாழ்ப்பாணம் கிங்ஸ் அணியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த மூன்று வீரர்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாடு செய்துள்ள லங்கா பிறீமியர் லீக் இருபது -20 கிரிக்கெட் 3ஆவது தொடரில் வீரர்கள் ஒதுக்கீட்டுத் தேர்வு நேற்று முன்தினம் நடந்தது.

இதில், ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் விளையாடும் உலகப் பிரசித்தி பெற்ற வீரர்கள் வாங்கப்படாத போதிலும் பல முன்னணி வெளிநாட்டு வீரர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இருவகை சர்வதேச மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் பிரகாசித்துவரும் இலங்கையின் முன்னணி வீரர் பதும் நிஸங்கவை எந்த அணியும் வீரர்களுக்கான ஒதுக்கீட்டுத் தேர்வில் எடுக்கவில்லை.

தவிர, உள்ளூரில் பிரபலமான அதிரடி வீரர் குசல் ஜனித் பெரேரா, அவிஷ்க பெர்னாண்டோ (இருவரும் உபாதையிலிருந்து மீளவில்லை), ஒஷத பெர்னாண்டோ, லஹிரு மதுஷன்க, சுழல்பந்து வீச்சாளர் அக்கில தனஞ்சய, வேகப்பந்துவீச்சாளர்களான லஹிரு குமார மற்றும் கசுன் ராஜித போன்றவர்களும் உள்வாங்கப்படவில்லை.

இதேசயம், நடப்பு சம்பியனான யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி யாழ்ப்பாணத்தை சேர்ந்த 3 வீரர்களை அணியில் சேர்த்துள்ளது. யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் தலைவர் விஜயகாந்த் வியாஸ்காந்த், அதே கல்லூரியின் முன்னாள் வீரர் சுழல்பந்துவீச்சாளர் தீசன் விதுசன், சென். ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் வீரர் சகலதுறை ஆட்டக்காரர் தெய்வேந்திரம் டினோசன் ஆகியோரே அணிக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அணி விவரம்

யாழ்ப்பாணம் கிங்ஸ்:

அஷான் ரந்திக்க, எவின் லூயிஸ் (மே.தீ.), நிபுன் தனஞ்சய, சதிர சமரவிக்ரம, திஸர பெரேரா (தலைவர்), சொகைப் மலிக் (பாகிஸ்தான்), துனித் வெல்லா லகே, தனஞ்சய டி சில்வா, தெய் வேந்திரம் டினோசன், சுமிந்த லக்ஷான், ரஹ்மானுல்லா குர்பாஸ் (ஆப்கானிஸ்தான்), ட்ரைஸடன் ஸ்டப்ஸ் (தெ.ஆ.), மஹீஷ் தீக்ஷன, ப்ரவீன் ஜயவிக்ரம, ஷனாவாஸ் தஹானி (பாகிஸ்தான்), பினுர பெர்னாண்டோ, ஹார்டஸ் வில்ஜோயன் (தெ.ஆ.), டில்ஷான் மதுஷன்க, விஜயகாந்த் வியாஸ்காந்த், தீசன் விதுசன்.

காலி கிளாடியேற்றர்ஸ்:

இமாத் வசிம், தனுஷ்க குணதிலக, பாஹீம் அஸ்ரப், துஷ்மந்த சாமீர, ஜான்மன் மாலன், காய்ஸ் அஹ்மத், அஸாம் கான், குசல் மெண்டிஸ், லக்ஷான் சந்தகான், நுவன் துஷார, சப்ராஸ் அஹமத், புலின தரங்க, நுவனிது பெர்னாண்டோ, நிமேஷ் விமுக்தி, மொவின் சுபசிங்க, நிபுன் மலிங்க, லக்ஷான் கமகே, தரிந்து கௌஷால், சம்மு அஷான்.

கொழும்பு ஸ்ரார்ஸ்:

ட்வெய்ன் ப்ரிட்டோரியஸ், அஞ்சலோ மத்தியூஸ், அசிவ் அலி, சரித் அசலங்க, டொமினிக் ட்ரேக்ஸ், பஸால்ஹக் பறூக்கி, நவீன் உல் ஹக், நிரோஷன் திக்வெல்ல, தினேஷ் சந்திமால், தனஞ்சய லக்ஷான், கரிம் ஜெனட், சீக்குகே ப்ரசன்ன, ஜெவ்றி வெண்டர்சே, இஷான் ஜயரட்ன, முடித்த லக்ஷான், லக்ஷித்த மனசிங்க, கெவின் கொத்திகொட, நவோத் பரணவித்தான, சமோத் பட்டகே.

தம்புள்ளை ஜியான்ட்ஸ்

டி“ஆர்ச்சி ஷோர்ட், தசுன் ஷானக்க, பென் கட்டிங், பானுக்க ராஜபக்ஷ, சந்தீப் லெமிச்சான், டிம் சீவேர்ட், ஹய்தர் அலி, சத்துரங்க டி சில்வா, ரமேஷ் மெண்டிஸ், நுவன் ப்ரதீப், ஷெல்டன் கொட்ரெல், தரிந்து ரத்நாயக்க, ப்ரமோத் மதுஷான், லசித் குரூஸ்புள்ளே, கலன பெரேரா, டிலும் சுதீர, சச்கித்த ஜயதிலக்க, துஷான் ஹேமன்த, சஷா டி அல்விஸ், ரவிந்து பெர்னாண்டோ.

கண்டி பல்கன்ஸ்:

கார்லோஸ் ப்ரத்வெய்ட், வனிந்து ஹசரங்க, பேபியன் அலன், சாமிக்க கருணாரட்ன, அண்ட்ரே ப்ளெச்சர், டிவோல்ட் ப்ரெவிஸ், கிறிஸ் க்றீன், இசுரு உதான, மதீஷ பத்திரண, அஷேன் பண்டார, உஸ்மான் ஷின்வாரி, கமிந்து மெண்டிஸ், அஷான் ப்ரியஞ்சன், மினோத் பானுக்க, அவிஷ்க பெரேரா, அஷேன் டெனியல், மலிந்த புஷ்பகுமார, ஜனித் லியனகே, லசித் அபேரட்ன, கவின் பண்டார.

# கடும் சவால் அளித்த சின்னர் போராடி வென்ற ஜொகோவிச்!

லண்டன், ஜூலை 07

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் உலகின் முன்னணி வீரரான நோவக் ஜொகோவிச் கடும் போராட்டத்தின் பின்னர் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடக்கிறது.

இதில், ஆடவர் பிரிவின் காலிறுதி சுற்று ஆட்டத்தில் உலகின்முதல் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜொகோவிச், இத்தாலியின் ஜானிக் சின்னருடன் மோதினார். இதில், முதல் இரு செற்களை 7-5, 6-2 என சின்னர் கைப்பற்றினார். இதையடுத்து சுதாகரித்த ஜொகோவிச் அதிரடியாக ஆடி 6-3, 6-2, 6-2 என்ற கணக்கில் அடுத்த 3 செற்களையும் கைப்பற்றினார். இதன்மூலம் ஜொகோவிச் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதி சுற்றில் பெல்ஜியத்தின் டேவிட் கோபின், அமெரிக்காவின் கமரூன் நூரியுடன் மோதினார். இதில் இருவரும் தலா 2 செற்களைக் கைப்பற்றினர். வெற்றியாளரை நிர்ணயிக்கும் இறுதி செற்றை நூரி கைப்பற்றினார். இதன்மூலம் 3-6, 7-5, 2-6, 6-3, 7-5 என்ற செற் கணக்கில் வென்ற நூரி அரையிறுதிக்கு முன்னேறினார். (ஐ)



ஈழநாடு



# நலிவடைந்து வரும் வங்கி நடவடிக்கை!

கொழும்பு, ஜூலை 07

இலங்கையில் எரிபொருள் நெருக்கடிக்கு முகங்கொடுத்து வங்கி முறையை ஒழுங்கான முறையில் பேணுவதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரிக்கவில்லை என இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் உப தலைவர் தனுஷ்க குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக வங்கி நடவடிக்கைகள் படிப்படியாக நலிவடைந்து வருவதாக அவர் கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதுவரை வங்கி அமைப்பின் செயல்பாட்டுக்கு ஒரு பெரிய நெருக்கடி உருவாக்கப்பட்டுள்ளது. வங்கிகளை நடத்தும் எந்த திட்டத்திலும் அரசாங்கம் தலையிடவில்லை.

அதனால், வங்கி ஊழியர்கள் பணிக்கு வரக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படவில்லை. மற்றொன்று, வங்கி அமைப்பை இயக்க மின்சாரம் தேவை. மின்வெட்டால் வங்கிகள் எரிபொருள் ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தி இயங்க வேண்டியுள்ளது.

வங்கிகளை இயக்குவதற்காக ஜெனரேட்டர்களை பயன்படுத்த எரிபொருள் வழங்கும் திட்டம் இல்லை. குறிப்பாக கிராமப்புறங்களில் வங்கிகளை இயக்க முடியாத நிலை காணப்படுகிறது. ஏனெனில் ஜெனரேட்டர்களை பயன்படுத்த எரிபொருள் இல்லாத நிலை காணப்படுகிறது.

வங்கிகளை நடத்துவதில் சிக்கல் மேலும், ஊழியர்கள் பணிக்கு வரமுடியவில்லை. எனினும் வங்கி நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்காக எந்த திட்டமும் எங்களுக்கு முன்வைக்கப்படவில்லை. எனவே, எதிர்காலத்தில் வங்கிகளை நடத்துவதில் கடும் சிக்கல் ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

# அரசியலமைப்பை மாற்றுவதைவிட அரசியல் முறையே மாறவேண்டும்!

## சரத் பொன்சேகா எம்.பி. வலியுறுத்து

**கொழும்பு, ஜூலை 07**

**நாடு முன்னேற்றத்தை நோக்கிச் செல்லவேண்டுமாயின் அரசியலமைப்பை மாற்றுவதில் எவ்விதமான அர்த்தமும் இல்லையெனவும், அரசியல்வாதிகள் சிந்தித்து மக்களுக்காக செயற்படுவார்களாயின் நாடு முன்னேற்றமடையும் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

பாராளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஊழல் மோசடியற்ற பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்வார்களாயின் நாடு தானாகவே முன்னோக்கிச் செல்லுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் முறைமைகள் மாற்றமடைய வேண்டும்.

பொதுமக்கள் இன்று வறுமையான ஒரு வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றனர். இதற்கு அரசியல்வாதிகளே முழு



பொறுப்பையும் ஏற்கவேண்டுமெனவும் சரத் பொன்சேகா எம்.பி. குறிப்பிட்டார்.

நாம் அனைவரும் இணைந்து சர்வகட்சி அரசாங்கமொன்றை ஆரம்பித்தாலும் சிரேஷ்ட உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வார்கள். அப்போதும் அரசுக்குள் பிரச்னைகள் உருவாகும் என்பதில் சந்தேகமில்லை. எனவே ஏதாவது ஒரு கட்சி அரசாங்கத்தை பொறுப்பேற்று நடத்தவேண்டும். எதிர்க்கட்சியாவது இதனை பொறுப்பேற்கவேண்டும். அவ்வாறு நெருக்கடிகளை சமாளித்து ஆட்சியமைக்க முடியவில்லை என்றால் அனைவரும் வெளியேறிச் செல்லவேண்டுமெனவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டார். (அ)

# மட்டக்களப்பு விமான நிலையத்தை விமான பயிற்சியகமாக மாற்ற முடிவு

மட்டக்களப்பு, ஜூலை 07

மட்டக்களப்பு விமான நிலையத்தை விமான பயிற்சியகமாக மாற்றுவதற்கு அமைச்சரவை இணக்கம் வெளியிட்டுள்ளது.

அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைய இதற்கான இணக்கம் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த யோசனையை சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ளார்.

ஏற்கனவே 2018ஆம் ஆண்டு மட்டக்களப்பு விமான நிலையம் உள்ளூர் விமான சேவைகளை மேற்கொள்வதற்கான தளமாக மாற்றியமைக்கப்பட்டது.

இலங்கை விமான படையும், வீதி அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து இந்த விமான தளத்தை உள்ளூர் சேவகளுக்காக தயார்ப்படுத்தியிருந்தன.

எனினும் இதுவரை காலமும் குறித்த விமானத் தளத்திலிருந்து எவ்வித வருமானங்களும் பெறப்படவில்லை.

இதனையடுத்தே குறித்த விமானத் தளத்தை வருமானம் பெறக்கூடிய தளமாக மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# எரிபொருளுக்கு விலையையும், தரகுப் பணமும் வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் இணக்கம்

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 07

40,000 மெற்றிக் தொன் எரிபொருளுக்காக விலையையும், தரகு பணத்தையும் வழங்க இலங்கை அரசாங்கம் இணக்கம் வெளியிட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்து வருகிறது. இந்த நிலையில், இலங்கைக்கு எடுத்து வர எதிர்பார்க்கப்படும் 40,000 மெற்றிக் தொன் எரிபொருளுக்காக மோசடிக்காரர்களுக்கும், திருடர்களுக்கும் 700



மில்லியன் ரூபாவை தரகுப் பணமாக வழங்க இலங்கை இணங்கியுள்ளது என்று ஹர்ஷ டி சில்வா தமது ருவிட்டரில் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக அரச பொறுப்பு முயற்சிகள் தொடர்பான குழுவின் (கோப்) முன் அதிகாரிகள் அழைக்கப்பட்டதாகவும், ஆனால் அவர்கள் நேற்று முன்தினம் பிரசன்னமாக மறுத்துவிட்டதாகவும் ஹர்ஷ டி சில்வா இன்று பாராளுமன்றில் குறிப்பிட்டார்.

இந்தநிலையில் ஹர்ஷ டி சில்வாவின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க, பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளை கோப் குழு சந்திக்கும் வகையில் நேரத்தை மாற்றியமைக்குமாறு கோரிக்கை விடுத்தார். (அ)

# மீண்டும் உயர்ந்தது சிமெந்தின் விலை

கொழும்பு, ஜூலை 07

சிமெந்தின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

50 கிலோ கிராம் எடையுடைய சீமெந்து பக்கெற் ஒன்றின் விலை 200 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சிமெந்து விநியோகஸ்தர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, சிமெந்து பைக்கெற் ஒன்றின் புதிய விலை 3200 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருட்களின் விலையேற்றம் ஆகியன காரணமாக சிமெந்து பக்கெற்றுகளை பல்வேறு இடங்களுக்கும் கொண்டு செல்வதில் பாரிய அசௌகரியங்களையும், போக்குவரத்து பிரச்னைகளையும் எதிர்கொண்டு வருவதாக சிமெந்து விநியோகஸ்தர்கள் சங்கத்தினர் குறிப்பிடுகின்றனர்.

சிமெந்து விலையேற்றம் காரணமாக வீடுகள், கட்டடங்கள் நிர்மாண துறையில் ஈடுபடுவோரும் தமது தொழிற்துறையில் பாரிய பின்னடைவை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை முன்னர் 50 கிலோ கிராம் சிமெந்து பைக்கெற் 900 ரூபாவாக காணப்பட்டபோதிலும், இந்த ஒரு வருட காலப்பகுதிக்குள் சிமெந்து பக்கெற்றின் விலை 6 சந்தர்ப்பங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

# நியூசிலாந்தும் பயண எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 07

இலங்கைக்கான அத்தியாவசியமற்ற பயணங்களை தவிர்த்துக்கொள்ளுமாறு தமது நாட்டு பிரஜைகளுக்கு நியூசிலாந்து அறிவுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான நியூசிலாந்து தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தற்போது பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதுடன், எரிபொருள் பற்றாக்குறையால், பொது போக்குவரத்து, வாடகை வாகனம், உணவு விநியோகம் என்பனவற்றுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இலங்கைக்கான அத்தியாவசியமற்ற பயணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு நியூசிலாந்து அறிவுறுத்தியுள்ளது. (அ)

# விசுவமடுவில் கடத்தப்பட்ட 3 இளைஞர்கள் ரிப்பருக்குள்!

முல்லைத்தீவு, ஜூலை 07

முல்லைத்தீவு-விசுவமடுப் பகுதியில் 3 இளைஞர்கள் தாக்கப்பட்டு, நேற்று முன்தினம் இரவு கடத்தப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்ட இளைஞர்கள் ரிப்பர் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டு முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இளைஞர்களை கடத்திச் சென்ற ரிப்பர், வடிகானொன்றுக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது கடத்தப்பட்ட இளைஞர்களையும் ரிப்பருக்குள்ளேயே விட்டுவிட்டு சந்தேகநபர்கள் தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# 7,500 மெற்றிக் தொன் எரிபொருள் கொலன்னாவை முனையத்துக்கு

கொழும்பு, ஜூலை 07

லங்கா ஐஓசி நிறுவனம் கொலன்னாவ எண்ணெய் முனையத்துக்கு 7,500 மெற்றிக் தொன் எரிபொருளை அனுப்பியதாக அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் மனோஜ் குப்தா தெரிவித்தார்.

திருகோணமலையிலிருந்து நேற்று முன் தினம் இந்த எரிபொருள் கையிருப்பு அனுப்பப்பட்டதாக அவர் வெளியிட்டுள்ள ருவிட்டர் செய்தியில் குறிப்பிட்டார். (அ)

# ஜனநாயக அமைப்புகளின் மீது; இளைஞரின் நம்பிக்கை உடைவு

கொழும்பு, ஜுலை 07

பாராளுமன்றம் உள்ளிட்ட ஜனநாயக அமைப்புக்களின்மீது படித்த இளம் தலைமுறையினரின் நம்பிக்கை பெருமளவு உடைக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் இம்தியாஸ் பக்கீர் மரிக்கார் எம். பி. தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்,

இளைஞர்களுக்கான தேர்தல் வேட்பு மனுவில் 25வீதம் வழங்குவதற்கான திருத்தப்பட்ட சட்டமூலத்தை முன்வைத்த பக்கீர் மரிக்கார், எதிர்காலம் குறித்த தீர்மானங்களில் இளைஞர்களின் குரலுக்கு இடமில்லையென்றால் நாடு மீண்டும் ஓர் ஆபத்தான சூழ்நிலைக்குச் செல்லலாம் - என்றார்.

மேலும், "பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைப்புக்களில் இளைஞர்களின் நியாயமான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் இயக்கங்களின் தலைவர்களிடமும் இந்த கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

அரசியல் கட்சிகளுக்குள் ஜனநாயக சீர்திருத்தங்கள் இருக்க வேண்டும், இல்லையெனில், அரசியல் கட்சிகள் முதலாளித்துவ நிறுவனங்களின் மேல் தட்டு குடும்பங்களின் ஏகபோகமாக மாறும் -என்றார். (ஐ)

# பொருளாதார உறுதிப்பாட்டுக்கு நீதிக்கான சமத்துவம் அவசியம்!

## அமெரிக்க தூதுவர் வலியுறுத்து

கொழும்பு, ஜுலை 07

இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதற்கு நீதியமைச்சு முன்னெடுத்து வரும் முயற்சிகளுக்குப் பங்களிப்புச்செய்யும் நோக்கில் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் 15 மில்லியன் டொலர்களை வழங்கியிருப்பதாகத் தெரிவித்திருக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங், நீதியை நாடுவதிலுள்ள சமத்துவத் தன்மை பொருளாதார உறுதிப்பாட்டுக்கு மிகவும் அவசியம் என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இலங்கையின் சட்டக்கட்டமைப்பை சர்வதேச சட்டக்கட்டமைப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சி தொடர்பான கடப்பாடுகளுக்கு அமைவானதாக மேம்படுத்துவதற்கு அவசியமான உதவிகளை நீதியமைச்சு மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டமைப்புக்களுடன் இணைந்து வழங்குவதன் மூலம் இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"நீதியை நாடுவதற்கான சமத்துவத் தன்மையை உறுதிசெய்வதென்பது பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு இன்றியமையாததாகும்.

அந்தவகையில் இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கான நீதியமைச்சின் முயற்சிக்குப் பங்களிப்புச்செய்யக்கூடிய வகையில் பயிற்சிகளை வழங்குவதற்கும், தொழில்நுட்பங்களை நவீனமயப்படுத்துவதற்கும், இலங்கையின் சட்டக்கட்டமைப்பில் பெண்களின் வகிபாகத்தை மேம்படுத்துவதற்கும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் 15 மில்லியன் டொலர்களை வழங்குகின்றது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## வரலாற்றில்...

44 வருடங்களில் 6 நிறைவேற்று ஜனாதிபதிகள் பாராளுமன்றத்துக்கு வந்துள்ளனர். இவ்வளவு கால வரலாற்றில் ஜனாதிபதியின் பெயரைக் கூறி, பாராளுமன்றத்தை விட்டு வெளியேறுமாறு முழக்கம் எழுப்பி போராட்டம் நடத்தப்படவில்லை.

ஜனாதிபதி, நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்துக்கு சென்றிருந்தார். அங்கு அவருக்கு எதிராக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர். இதையடுத்து அவர் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறினார்.

நாட்டனி - வரலாற்றில் ஜனாதிபதி ஒருவர் சபையில் அமர்ந்திருக்கும் போது பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

18.08.1987 அன்று ஜனாதிபதியாக இருந்த காலஞ்சென்ற ஜே. ஆர்.ஜெயவர்த்தன பாராளுமன்றத்தில் இருந்த போது ஜே.வி.பி.யினர் நடத்திய கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானார். இது ஒரு பயங்கரவாதச் செயல்.

இதேபோன்று சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க புதிய அரசமைப்பை முன்வைத்து (ஓகஸ்ட் 2000) உரையாற்றிக் கொண்டிருந்த போது, அன்று எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசமைப்பு வரைவை தீ வைத்து எரித்தது. ஆனால், சந்திரிகா தனது உரையைத் தொடர்ந்தார்.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ பதவி நீக்கம் செய்யப்பட்ட நேரத்தில், பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடைந்து, புதிய நாடாளுமன்ற அமர்வு தொடங்கப்பட்ட நாளில், எதிர்க்கட்சிகளின் கூச்சல்களுக்கு அவர் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. பாராளுமன்ற அமர்வில் உரையாற்றிய ஜனாதிபதி பிரேமதாஸ, தனது தொடக்க உரையை முடித்துக் கொண்டு எதிர்க்கட்சியினருக்கு பதிலளிக்கத் தயாராக இருந்த போதிலும், அவர் மோதலுக்குச் செல்லவில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றத்துக்குள் நுழைந்தது தொடக்கம் வெளியேறும் வரை எதிர்ப்பை எதிர்கொண்டு, பாராளுமன்ற மரபுப்படி எந்தவித ஆட்சேபனையோ, பதிலையோ, சவாலோ செய்யாத ஒருவராக வரலாற்றில் இடம்பிடித்துள்ளார் என்றும் அந்தக் கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## பண்ணைக்...

மீனவர்களே சடலத்தை கண்டு பொலிஸாருக்கு தகவல் அளித்தனர். இதையடுத்து தடயவியல் பொலிஸார் அப்பகுதிக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

சடலத்தை பார்வையிட்ட யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார், முதியவர் தீவுப் பகுதியை சேர்ந்தவராக இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்ததுடன், சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உடல்கூற்று பகுப்பாய்வுக்காக ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (ஐ- 3)

## தென்னை...

கடந்த வெள்ளிக்கிழமை குறித்த நபர் ஏணி வைத்து தென்னை மரத்தில் ஏறியுள்ளார். அவர் இறங்க முற்பட்டபோது ஏணியில் கால் வைக்க முயற்சித்த நிலையில் மரத்திலிருந்து தவறி விழுந்துள்ளார்.

அவரின் வீட்டார் அவரை உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

ஆனால், சிகிச்சை பலனின்றி நேற்று புதன்கிழமை அவர் மரணமானார். அவரின் மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் நடத்தினார். (ஐ)

## ஹாட்லி...

ஹாட்லி கல்லூரி மாணவன் ஒருவர்.

செல்வச்சந்திரன் சிறிமன் என்ற மாணவரே இந்தக் கண்டுபிடிப்பை செய்ததுடன், மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பொருட்களை பயன்படுத்தி இந்தக் கண்டுபிடிப்பை செய்துள்ளார்.

இதனை, அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று பாடசாலையின் இளம் புத்தாக்குநர் கழகத்தின் தலைவர் இராஜ அரவிந்தன் தலைமையில் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கல்லூரியின் அதிபர் தம்பையா கலைச்செல்வன் விருந்தினராகப் பங்கேற்று மாணவனின் கண்டுபிடிப்பை அறிமுகம் செய்ததுடன், அவரையும் பாராட்டினார்.

இந்த நிகழ்வில், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-2-3)

## பஸ்ஸில் சென்ற...

உயிரிழந்தார் என்று அறிய வருகின்றது.

அதிக சன நெரிசலுடன் பயணித்த பேருந்தில் ஏறிய இளைஞர் பருத்தித்துறை - முதலாம் கட்டை பஸ் தரிப்பிடத்தில் இறங்கியபோது மயங்கிச் சரிந்துள்ளார். அங்கிருந்தவர்கள் அவரை உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவித்தனர்.

சடலம் உடல்கூறாய்வு பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-2-3)

## போராட்டம்...

எழுப்பப்பட்டது.

இதையடுத்து ஹிருணிகா பிரேமச்சந்திர உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டனர். எனினும், இவர்கள் அனைவரும் நேற்று மாலை பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, ஹிருணிகா தலைமையிலான குழுவினர் முன்னெடுத்த போராட்டத்தால் ஜனாதிபதியின் இல்லத்துக்குச் செல்லும் வீதிகள் மூடப்பட்டன. (ஐ)

## ஜனாதிபதியின்...

அறிவிப்பையும் வழங்கவில்லை என்றும் அரச உயர் வட்டார தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியுடனான இந்த சந்திப்பில் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் பங்கேற்றனர்.

இதனிடையே, பயனற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஆளும் கட்சி கூட்டத்தில் தான் பங்கேற்கப் போவதில்லை என்று அரச தலைவருக்கு பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார கடிதம் மூலம் அறிவித்தாரென்றும் அறிய வருகின்றது. (ஐ)

## கொழும்பில்...

ஒன்றியம் முன்னெடுத்த ஆர்ப்பாட்டமும் கண்ணீர் புகைக் குண்டுகள் வீசியும், தண்ணீர் தாரை பிரயோகம் செய்தும் கலைக்கப்பட்டன.

விவசாயிகள் முகம் கொடுத்துள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இரு வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்கின் பின்னர் புதுக் கடை உயர் நீதிமன்ற வளாகத்திலிருந்து, பாராளுமன்ற உறுப்பினர்களான நளின் பண்டார, துஷார இந்துனில் தலைமையில் விவசாயிகள், ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றும் ஆதரவாளர்கள் அங்கிருந்து புறக்கோட்டை வழியாக கோட்டைக்கு பேரணியாக சென்றனர்.

அவர்கள் செத்தம் வீதி ஊடாக ஜனாதிபதி மாளிகையை நோக்கி முன்னேற முயன்றனர். செத்தம் வீதியின் முதல் வீதித் தடையை மீறி முன்னோக்கி சென்ற ஆர்ப்பாட்டக்காரர்களை இரண்டாம், வீதித் தடையில் வைத்து பொலிஸார், அதிரடிப் படையினர் தடுத்தனர். கலகம் அடக்கும் பொலிஸாரும் அங்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நீர்த்தாரை பிரயோகம், கண்ணீர் புகைக் குண்டுகள் வீசப்பட்டன. இதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் கலைக்கப்பட்டது.

இதேபோன்று, கனிய வளங்கள் பாதுகாப்பு தொழில் சங்க ஒன்றியம் நேற்று ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தது. இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பாராளுமன்ற உள் நுழையும் வீதிக்கு அருகே கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டு கலைக்கட்டனர். (ஐ)

## மக்களை...

யாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நேற்றைய தினத்திலிருந்து சமூக வலைத்தளங்களில் சர்ச்சையை தோற்றுவிக்கும் வகையிலான காணொலி பதிவொன்று பிரபலமாகி வருகின்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினரொருவர் ஏனைய உறுப்பினர்களுக்கு கைக்குண்டு ஒன்றைத் தயாரிக்கும் முறைமையை கற்றுக்கொடுக்கும் வகையில் அந்த காணொலிப் பதிவு அமைந்துள்ளது.

அது மாத்திரமல்லாது ஜனாதிபதியின் வாசஸ்தலத்தை சுற்றிவளைப்பதுடன், இந்த விடயம் அநுரகுமாரவின் ஆலோசனைக்கு அமைய முன்னெடுக்கப்படுவதாகவும் அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது ஆபத்தான நிலைமை ஒன்றை தோற்றுவிக்கும் வகையிலான பதிவாகும். அதுவும் , மக்களின் ஆர்ப்பாட்டத்தை வன்முறையாக மாற்றி கொலை வரை கொண்டு செல்லும் வகையிலான திட்டம் மக்கள் விடுதலை முன்னணியிடம் உள்ளது என்றவாறானதொரு நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கும் வகையிலேயே அந்தப் பதிவு அமைந்திருக்கின்றது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் அமைச்சருடன் கதைத்து விடயத்தை தெரியப்படுத்தினேன். இதேவேளை இன்றையதினம் (நேற்று) குற்றப்புலனாய்வு பிரிவில் இந்த காணொலிப் பதிவை சமர்ப்பிக்கத் தயாராகவுள்ளோம்.


குற்றப்புலனாய்வு பிரிவு இந்த விடயம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு இந்த குரல் பதிவு யாருடையது, இதனை தயாரித்து இதனை சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்தது யார் என்ற விடயம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

அரசாங்கத்துக்கு அதனை நாட்டுக்கு வெளிப்படுத்தும் இயலுமை இல்லையாயின் இதனை அரசாங்கத்தின் வேலையாகவே எடுத்துக்கொள்வோம். அத்துடன், இத்தகைய கேலித்தனமான விடயங்களை மேற்கொண்டு மக்களின் கோரிக்கைகளை திசைதிருப்ப முயற்சிக்க வேண்டாம் என அரசாங்கத்திடம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஈழநாடு
Eelanadu

# மண்ணெண்ணெய் விலை அதிகரிக்கும்

## பிரதமர் ரணில் அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 07

எதிர்காலத்தில் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை அதிகரிக்கப்படுமென பிரதமர் ரணில் விக்கிர மசிங்க தெரிவித்துள்ளார்.

அதிகரிக்கப்படும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் விலை மீனவர்களுக்கு மானியமாக வழங்கப்படும் எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மீன்பிடி கப்பல்களுக்கு டீசல், எரிவாயு மற்றும் ஐஸ் போன்றவற்றை தொடர்ச்சியாக வழங்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

கடற்றொழில் துறையினர் எதிர்நோக்கும் நெருக்கடிகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் திலீப் வெத ஆராச்சி நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

அந்த நிவாரணங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (அ)

# அரசியல் விளையாட்டுகளை நிறுத்தி பிரதமர் உடன் பதவி விலக வேண்டும்!

## அமைச்சர் தம்மிக பெரேரா

கொழும்பு, ஜூலை 07

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் மற்றும் பிரதமர் பதவியில் இருந்து உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும் எனவும் அவர் விளையாடும் அரசியல் விளையாட்டு நிறுத்தப்பட வேண்டும் என்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், நாட்டுக்கு டொலர்களை கொண்டு வரக்கூடிய அனைத்து திட்டங்களையும் பிரதமர் நிறுத்தியுள்ளார். இன்று முதல் போராட்டத்துக்கு தயார்படுத்த முடிவு செய்துள்ளேன். அரசாங்கத்தில் சேர்ந்து ஏழு நாட்கள் ஆகிறது, இங்கு என்ன நடக்கிறது என்பதை பார்த்தேன். நாட்டின் பணப் புழக்கத்திற்கான எந்த திட்டமும் பிரதமரிடம் இல்லை. நாட்டில் உள்ள மக்களுக்கு உணவளிக்கும் திட்டமோ, நாட்டுக்கு டொலர்களை கொண்டு வரும் திட்டமோ அவரிடம் இல்லை. அவரின் பிரதமர் பதவியில் எனக்கு சிக்கல் உள்ளது. நிதிய மைச்சர் என்ற முறையில் பிரதமர் இந்த நேரத்தில் மக்களிடம் பிரச்சனைகளைச் சொல்லிக் கொண்டு நடக்கக்கூடாது.

பத்து வருட பல விசாவிற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஒரு மாதத்திற்கு முன்பு அனைத்து தொடர்புடைய ஆவணங்களையும் பூர்த்தி செய்த பிறகு தீர்மானம் எடுக்கப்பட்டது. ஒரு மாதம் ஆகிவிட்டது, மேலும் இந்த திட்டம் திறைசேரியில் இன்னும் தேக்க நிலையில் உள்ளது. நாட்டுக்குள் டொலர்களை கொண்டு வர உதவுவதால், திட்டத்தை நிறுத்துவது பிரதமரின் வழக்கம். 100,000 அமெரிக்க டொலர்களை செலுத்தி வீசா பெற 50 இற்கும் மேற்பட்டோர் இங்கு வந்துள்ளனர். மேலும், 300 பேர் வரிசையில் உள்ளனர். அந்த திட்டத்தை செயல்படுத்தினால், இந்த மாதம் 30 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நாட்டிற்கு கொண்டு வரப்படும். திட்டத்தை செயல்படுத்த பிரதமர் அனுமதிக்க மாட்டார்.

இன்று முதல், இதுபோன்ற நடைமுறையை இனி நாட்டில் நடக்க விடமாட்டேன். எனவே, நிதியமைச்சர் ஒரு பேரழிவைத் திட்டமிடுகிறார் என்று நான் கூறுகிறேன். தற்போதைய டொலர் நெருக்கடியை தீர்க்கும் திட்டம் எதுவும் அவரிடம் இல்லை. இலங்கையின் பொருளாதார சவால்கள் அனைத்தும் தற்போதைய டொலர் நெருக்கடியுடன் தொடர்புடையவை. நிதி அமைச்சர் நண்பர்களிடம் கடன் வாங்க திட்டமிட்டுள்ளார். எனவே, நாட்டின் பணப்புழக்கத்திற்கான எந்த திட்டமும் அவரிடம் இல்லை. டொலர் வருவாய், கடன் வாங்குதல், பிரிட்ஜிங் ஃபைனான்ஸ், கிடைக்கக்கூடிய கடன் வரிகள் மற்றும் அத்தியாவசிய கடன் வரிகள் தொடர்பான அனைத்து விஷயங்களும் அவரால் ஒத்தி வைக்கப்படுகின்றன. எனவே, இந்தக் காரணங்களுக்காக நிதி அமைச்சர் பதவி விலக வேண்டும். அவர் இராஜினாமா செய்யாவிட்டால், தனது பொருளாதார நிபுணர்களுடன் பகிரங்க ஊடக விவாதத்துக்கு வருமாறு சவால் விடுகிறேன், என்றார். இந்த நாட்டை பேரழிவுக்குள் விழ விடமாட்டேன் - என்றும் கூறினார். (ஐ)

# ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் கோட்டாபய நேற்று பேச்சு!

கொழும்பு, ஜூலை 07

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை நேற்று தொடர்பு கொண்டு பேசியதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனான உரையாடல் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. கடந்த கால சவால்களை சமாளிக்க அவரது அரசாங்கம் வழங்கிய அனைத்து ஆதரவுக்கும் நன்றி தெரிவித்த அதேவேளை, தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கைக்கு எரிபொருளை இறக்குமதி செய்ய ரஷ்யாவின் கடன் உதவியை கோரினேன் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அத்துடன், ரஷ்யாவின் பயணிகள் விமானமான "ஏரோபிளோட்" சேவையை மீண்டும் தொடங்குமாறு கேட்டுக் கொண்டதுடன்

சுற்றுலா, வர்த்தகம் மற்றும் கலாசாரம் போன்ற துறைகளில் இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது நமது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்பை வலுப்படுத்துவதில் மிக முக்கியமானது என்பதை நாங்கள் ஒருமனதாக ஒப்புக்கொண்டோம் எனவும் ஜனாதிபதி கோட்டாபய தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (அ)









## மரண அறிவித்தல்

தோற்றம் 11 - 11 - 1928



மறைவு 03 - 07 - 2022

### திருமதி கந்தசாமி தெய்வானைப்பிள்ளை

யாழ். நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணை, பிரான்ஸ் Villeneuve Saint Georges ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தெய்வானைப் பிள்ளை அவர்கள் 03-07-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், சுப்ரமணியம்(இந்தியா), இராமகிருஷ்ணன்(கனடா), சிவகுமார்(கனடா), சிவனேஸ்வரன்(பிரான்ஸ்), லோகேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ருக்மணி, சத்திய பாமா (லண்டன்), காலஞ்சென்ற சிவனேஸ்வரி, விக்னேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலா தேவி(இந்தியா), கமலாராணி(கனடா), செல்வராணி(மலர்-கனடா), கோகுலராணி(பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி(பிரான்ஸ்), திலகரத்தினம்(லண்டன்), சிவசுப்ரமணியம்(ஜேர்மனி), லோகேஸ்வரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,யாதவன், ரம்மியா, சர்மிளா, சங்கீதா, சந்திரிகா , சசிரேகா, செல்வினி, சாரங்கன், மீரா, நித்தியா, திவ்யா, சோபிகா, ரிஷி கேசவன், சரண்யா, குமணன், மாதவன், சுகிந்தா, சோனியா, சௌமியன், சங்கரி ஆகியோரின் அன்புப் பேத்தியும்,ஆதிரியன், ஆர்த்தி, அனிசியா, சஞ்சய், விகான், அஞ்சலி, திவ்யா, வைபவ், அஸ்வின், அபினயா, காவியா, கீர்த்தி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

கிரியை
Wednesday, 13 Jul 2022 9:00 AM - 11:30 AM
Funérarium de Villeneuve-Saint-Georges Carrefour Jean Moulin, 94190 Villeneuve-Saint-Georges, France

தகனம்
Wednesday, 13 Jul 2022 1:00 PM - 2:30 PM
Inter-communal cemetery Valenton 15 Av. de la Font Saint-Martin, 94460 Valenton, France

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சிவனேஸ்வரன் - மகன்**

தொடர்புகளுக்கு:
**லோகேஸ் - மகன்** Mobile : +33662415500
**சிவனேஸ்வரன் - மகன்** Mobile : +33652324835



# இலங்கை போக்குவரத்துச் சபை உத்தியோகத்தர்கள் போராட்டம்

அம்பாறை, ஜூலை 07

இலங்கை போக்குவரத்துச் சபையின் கல்முனை பிராந்திய உத்தியோகத்தர்கள் எரிபொருள் நெருக்கடி காரணமாக போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

நேற்று புதன்கிழமை திடிரென கல்முனை பிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான டிப்போ முன்றலில் ஒன்றுகூடி தமக்கு எரிபொருளை பெற்றுத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் துரிதமாக செயற்பட்ட கல்முனை குற்றப்புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் , கல்முனை பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ. எல் ஏ. வாஹிட் , தலைமையிலான பொலிஸ் குழுவினர் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு சுமார் 210 லீற்றர் பெற்றோல் கல்முனை ஐ.ஓ.சி எரிபொருள் நிலையத்தில் இருந்து பெற்றுக்கொடுக்கப்பட்டது.

இதன்போது குறித்த எரிபொருள் பெற்றுக்கொடுக்கப்பட்டதை தொடர்ந்து போராட்டத்தை நிறுத்தி வழமை போன்று தமது பணிகளை கல்முனை பிராந்திய அலுவலக உத்தியோகத்தர்கள் முன்னெடுத்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து- வழங்குபவர் உளவள துனையாளர் - யாழ் பாவாணன்
07.10 மணி: இயற்கைவழி-எஸ்.உதயசீலன்-சமுர்த்தி உத்தியோகஸ்தர்



7.15 மணி : கதைவழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-06 கான்டில்,எதுக்கும் துணிந்தவன் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை




**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்-இசை நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகயோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு